بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 33

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

09 முஹர்ரம் 1443 ஹிஜ்ரி கமரி 19 ஸுஹுல் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 19 ஆகஸ்ட் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ ثَالِثُ ثَلٰثَةٍ ۘ وَمَا مِنْ اِلٰهٍ اِلَّآ اِلٰهٌ وَّاحِدٌ ؕ وَاِنْ لَّمْ يَنْتَهُوْا عَمَّا يَقُوْلُوْنَ لَيَمَسَّنَّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْهُمْ عَذَابٌ اَلِيْمٌ

நிச்சயமாக அல்லாஹ் மூவருள் ஒருவன் என்று கூறியவர்கள் நிராகரித்து விட்டனர். வணக்கத்திற்குரியவன் ஒருவனைத் தவிர்த்து வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை. அவர்கள் கூறும் கூற்றிலிருந்து அவரக்ள் விலகிக் கொள்ளவில்லையாயின் அவர்களுள் நிராகரிப்பவர்களுக்குக் கட்டாயமாக வேதனையளிக்கக்கூடிய தண்டனை கிடைக்கும். (5:74)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## اِنَّمَا يَخْشَى اللّٰهَ مِنْ عِبَادِهِ الْعُلَمٰٓؤُا

### ஆலிமே ரப்பானி என்பதற்கு எப்போதும் இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருப்பவர் மற்றும் வீணானவற்றை பேசாத நபர் என்று பொருள்படும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**ஆலிமே ரப்பானி என்பதன் பொருள்**

இலக்கணத்தில் அல்லது தர்க்கத்தில் மட்டும் தன்னிகரற்றவராக இருப்பது என்பது ஆலிமே ரப்பானி என்பதன் பொருளல்ல. மாறாக, ஆலிமே ரப்பானி என்பவர் யார் என்றால், எப்போதும் அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொண்டிருப்பவரும் தனது நாவினால் வீணான கூற்றுகளை பேசாமல் இருப்பவருமே ஆவார். ஆனால் இன்றைய காலம் எப்படி ஆகிவிட்டது என்றால் மரணித்தவர்கள் கூட தம்மைத் தாமே ஆலிம்கள் என்று கூறிக்கொள்கின்றனர். மேலும் இந்த சொல்லை தனிப்பட்ட சொல்லாக ஆக்கிக் கொண்டனர். இவ்வாறு இந்த சொல் மிகவும் ஏளனத்திற்கு ஆளாகிவிட்டது. இறைவனின் விருப்பம் மற்றும் நோக்கத்திற்கு எதிராக அதற்கு பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

ஏனென்றால் திருக்குர்ஆனில் ஆலிம்களின் பண்பாக, اِنَّمَا يَخْشَى اللّٰهَ مِنْ عِبَادِهِ الْعُلَمٰٓؤُا (35:29) என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதாவது அல்லாஹ்வுக்கு அஞ்சக்கூடிய ஆலிம்கள் அல்லாஹ்வின் அடியார்கள் ஆவார்கள்.

இப்போது இதைப் பார்ப்பது அவசியமாகும். அதாவது எந்த மக்களிடத்தில் இறையச்சம் மற்றும் தக்வா எனும் பண்பு காணப்படவில்லையோ அவர்கள் ஒருபோதும் ஒருபோதும் இந்தப் பட்டத்தால் அழைக்கப்படுவதற்கு தகுதியானவர்கள் அல்ல.

உள்ளபடியே உலமா என்பது ஆலிம் என்பதன் பன்மை ஆகும். எந்த விஷயம் உறுதியானதோ அதற்கு இல்ம் அதாவது அறிவு என்று கூறப்படும். உண்மையான அறிவு திருக்குர்ஆனிலிருந்து நமக்கு கிடைக்கின்றது. அது யுனானிகளின் தத்துவங்களிலிருந்தும் கிடைப்பதில்லை. தற்போதைய ஆங்கிலேய தத்துவங்களிலிருந்தும் கிடைப்பதில்லை. மாறாக, இது உண்மையான ஈமானிய தத்துவத்திலிருந்து கிடைக்கிறது. ஒரு நம்பிக்கையாளரின் உயர்ந்த படித்தரமும், சிறப்பும் என்னவென்றால் அவர் ஆலிம்களின் அந்தஸ்தை அடைய வேண்டும். மேலும் அறிவின் உச்சபட்ச அந்தஸ்தான ஹக்குல் யகீன் என்ற அந்தஸ்தை பெற வேண்டும். ஆனால் உண்மையான ஞானத்திலிருந்து செவிடராக இருப்பவரும், ஞானத்தை

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

**திருக்குர்ஆன் வந்ததற்கு மிகப்பெரிய காரணம் என்னவென்றால், அதன் முழுமையான மற்றும் உள்ளம் கவரும் போதனையாகும். உங்களுடைய ஷரீஅத்தில் ஒரு விஷயத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியம் ஏற்படுகிறது. வெளிச்சம் பாய்ச்சாத மனித வாழ்க்கையின் எந்தவொரு பகுதியையும் இந்த ஷரீஅத் விட்டு வைக்கவில்லை என்று ஒரு யூதர் கூறினார்**

رُبَمَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ كَانُوْا مُسْلِمِيْنَ (15:3)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

முஸ்லிம்களாக இருந்திருக்கலாமே என்ற நிராகரிப்பாளர்களின் இந்த ஆசை குறித்து அவர்கள் (இப்படி) எப்போது ஆசைப்பட்டனர் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விவாதம் செய்துள்ளனர். முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்திருக்கும்போது அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி இவ்வாறு ஆசைப்பட்டிருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். சிலர் கியாமத் நாளன்று இதைப் பொருத்திக் காட்டியுள்ளனர். நாம் முஸ்லிமாக இருந்திருக்கலாமே என்று அப்போது அவர்கள் கூறுவார்கள் என்று சிலர் கூறியுள்ளனர். வேறு சிலரோ இஸ்லாத்தின் முன்னேற்றங்கள் இதன் பொருளாகும். அதாவது எப்போது முன்னேற்றம் ஏற்படுமோ அப்போது இந்த ஆசை கொள்ளப்படும் என்று கூறுகின்றனர். இந்தப் பொருளும் சரியானதுதான். இதன் மீது எந்த ஆட்சேபனையும் இல்லை. ஏனென்றால் அரேபிய நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் காரணமற்று பகைமை கொண்டிருந்ததைப் போன்று பகைமை கொள்ளும்போது எதிரியின் முன்னேற்றத்தைப் பார்த்து மனிதனுக்கு பெரும்பாலும் இந்த சிந்தனை வந்து விடும். நான் அவரை பகைக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே! இன்று நான் பயன் பெற்றிருக்கக்கூடுமே! என்று அவர் எண்ணக்கூடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான பகைமை என்பது வெறும் பெறாமையின் காரணத்தால் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அசாதாரண முன்னேற்றங்களிலிருந்து அந்தப் பொறாமையின் சந்தர்ப்பங்கள் அகன்று கொண்டு சென்றன. எனவே நாம் முஸ்லிமாக இருந்திருக்கலாமே என்ற எண்ணம் அவர்களுக்கு பல முறை வந்திருக்கக்கூடும். இதேபோன்று பதர் சந்தர்ப்பத்தில் அவர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது நாம் முஸ்லிமாக இருந்திருக்கலாமே என்று அவர்களின் உள்ளம் விரும்பியிருக்கும்.

சுருக்கமாக இஸ்லாத்தின் வெற்றிகள் எதிரிகளின் உள்ளங்களில் நிச்சயம் ஏக்கங்களை உருவாக்கி இருக்கும். நாமும் முஸ்லிமாக இருந்திருக்கக்கூடாதா? என்ற ஏக்கம் ஏற்பட்டிருக்கும். நயவஞ்சகர்களின் கூற்று திருக்குர்ஆனில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் சுமார் பத்தரை ஆண்டுகள் வரை நீடித்தது**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் மொத்த பரப்பளவு 22,51,030 சதுர அடி மைல் ஆகும்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மிகவும் தெள்ளத் தெளிவாக தென்படுகின்ற ஒரு விஷயம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது அனைத்து மும்முரமான பணிகளுக்கு மத்தியிலும் ஒவ்வொரு வெற்றியின் நேரத்திலும் முஸ்லிம்களின் படையுடன் இருந்தார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**நான் எனது படையை ஆயத்தம் செய்கிறேன். மேலும் தொழுகையிலும் இருக்கின்றேன். (ஹஸ்ரத் உமர் (ரலி)**

**மதிப்பிற்குரிய ஃபத்ஹி அப்துஸ் ஸலாம் சாஹிப் உட்பட நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 ஜுலை 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வந்தது. அன்னாருடைய கிலாஃபத் காலகட்டத்தில் நடைபெற்ற போர்கள் மற்றும் கிடைத்த வெற்றிகள் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் சுமார் பத்தரை ஆண்டுகள் வரை நீடித்தது. இந்த காலம் ஹிஜ்ரி 13 முதல் ஹிஜ்ரி 23 வரை ஆகும். இந்த காலகட்டத்தில் கிடைத்த வெற்றிகளின் பரப்பளவைக் குறித்து அல்லாமா ஷிப்லி நுஃமானி தனது புத்தகத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் மொத்த பரப்பளவு 22,51,030 (இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்தி முப்பது) சதுர அடி மைல் ஆகும். இந்த வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்கள் அடங்கும். சிரியா, எகிப்து, ஈரான், ஈராக், ஹோஸிஸ்தான், ஆர்மேனியா, ஆஸர்பைஜான், பாரசீகம், குர்மான், கராஸான் மற்றும் பலூஜிஸ்தானின் சில பகுதிகளைக் கொண்ட மக்ரான் ஆகிய பகுதிகள் அடங்கும்.

(அல்ஃபாரூக் பக்கம் 159 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலேயே இஸ்லாமிய போர்கள் மற்றும் வெற்றிகளின் தொடர் ஆரம்பமாகி இருந்தது. அன்னாரின் காலத்தில் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில்) சிரியா, ஈராக் ஆகிய இடங்களில் இஸ்லாமிய படைகள் ஜிஹாதில் மும்முரமாக இருந்தன. ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் ஜிஹாத் நடைபெற்று வந்தன. பின்னர் இந்தத் தொடர் நீண்டு கொண்டே சென்றது. மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலும் அதேபோன்று தொடர்ந்து நடைபெற்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மிகவும் தெள்ளத் தெளிவாக தென்படுகின்ற ஒரு விஷயம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது அனைத்து மும்முரமான பணிகளுக்கு மத்தியிலும் ஒவ்வொரு வெற்றியின் நேரத்திலும் முஸ்லிம்களின் படையுடன் இருந்தார்கள். அன்னார் தமது கிலாஃபத் காலத்தில் எந்தவொரு போரிலும் முறையாக பங்கேற்கவில்லை என்றாலும் முஸ்லிம் தளபதிகளுக்கு படை ரீதியாக மதீனாவிலிருந்து அனைத்து வழிகாட்டல்களையும் அனுப்பி வந்தார்கள். அல்லது அன்னார் எங்கு இருந்தார்களோ அங்கிருந்து அவர்களுடன் தொடர்பில் இருந்தார்கள். இன்னும் கூறப்போனால், சில போர்களின் நிலவங்களிலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம் போர் வீரர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் அமர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கு தமது படைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் அந்தப் பகுதிகளின் வரை படம் இருந்ததைப் போன்று அல்லது அந்தப் பகுதிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் இருந்ததைப் போன்று முஸ்லிம்களுக்கு அந்த பகுதிகளைக் குறித்து அறிவித்து அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கி வந்தார்கள்.

இமாம் புகாரி அவர்கள் சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

وَقَالَ عُمَرُ رَضِيَ اللّٰهُ عَنْهُ إِنِّي لَأُجَهِّزُ جَيْشِي وَأَنَا فِي الصَّلَاةِ-

(சஹீஹ் புகாரி, கிதாபுல் அமல் ஃபிஸ்ஸலாத்.....)

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: நான் எனது படைகளை தயார் செய்கின்றேன். மேலும் நான் தொழுகையில் இருக்கின்றேன். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு கவலை கொண்டிருந்தார்கள் என்றால் தொழுகைகளுக்கு மத்தியிலும் இஸ்லாமிய படைகளின் திட்டங்களை வகுத்தார்கள். பிளானிங்கின் பணிகளை தொடர்ந்து கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் அன்னார் துஆவும் செய்து கொண்டிருப்பார்கள். இதன் காரணமாகவே நமக்கு தெளிவாக தெரிகின்றது. அன்னார் (ரலி) அவர்களின் வழிகாட்டலை பின்பற்றியவாறு முஸ்லிம்களின் படை கடினத்திலும் கடினமான சூழ்நிலைகளிலும் கூட அல்லாஹ்வின் அருளால் வெற்றிகளை ஈட்டின.

செய்யது மீர் மஹ்மூத் அஹ்மது சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தை குறித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார்கள். அதிலிருந்தும் எமது குறிப்புகளை தயார் செய்யக்கூடியவர்கள் பயன்பெற்றுள்ளார்கள். ஆய்வுக்குழு சில குறிப்புகளை எடுத்துள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த குறிப்புகள் அசல் மூலத்துடன் சரிபார்க்கப்பட்டுள்ளது. சரியாகவும் உள்ளது.

ஈரான் மற்றும் ஈராக் வெற்றிகள் தொடர்பாக அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பாரசீகர்களுடன் போர் நடைபெற்று வந்தது. இதற்கிடையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அதன் காரணமாக இஸ்லாமிய படைகளுக்கு தூதுச் செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. எனவே ஹஸ்ரத் முஸன்னா இஸ்லாமிய படையில் தனது பிரதிநிதியை நியமனம் செய்து விட்டு சுயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில்

ஆஜரானார்கள். அன்னார் (ரலி) அவர்களுக்கு போரின் நிலவரங்களை தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும், மேலும் உதவியை பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்காகவும் ஹஸ்ரத் முஸன்னா மதீனா வந்தடைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சம்பவங்களைப் பற்றி தகவல் கொடுத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் உமரே! நான் என்ன கூறுகின்றேனோ அதனை கவனமாக கேளுங்கள். பின்னர் அதன்படி அமல் செய்யுங்கள் என்று வஸிய்யத் செய்தார்கள். இன்று திங்கட்கிழமை ஆகும். இன்றே நான் மரணமடைந்து விடுவேன் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவேளை நான் மரணமடைந்து விட்டால் மாலை நேரத்திற்கு முன்பாக மக்களுக்கு ஜிஹாத் தொடர்பாக கவனமூட்டி அவர்களை முஸன்னாவுடன் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் ஒருவேளை எனது மரணம் இரவு வரை தாமதமானால் பின்னர் காலைக்கு முன்பாக முஸ்லிம்களை ஒன்றுகூட்டி அவர்களை முஸன்னா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். எனது மரணம் எனும் துன்பம் அது எவ்வளவு தான் பெரிதாக இருந்தாலும் அது உங்களை மார்க்க கட்டளைகள் மற்றும் இறைவனின் கட்டளைகளை செயல்படுத்துவதிலிருந்து ஒருபோதும் விலக்கி வைக்கக்கூடாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது நான் என்ன செய்தேன்? என்பதை நீங்கள் கண்டுள்ளீர்கள். உள்ளபடியே மக்களுக்கும் படைப்பினங்களுக்கும் அதுபோன்ற துன்பம் ஒருபோதும் வந்திருக்காது. இறைவன் மீது ஆணையாக! ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த கட்டளையை செயல்படுத்துவதில் அப்போது சிறிதளவு நான் தாமதம் செய்திருந்தாலும் பின்னர் இறைவன் நம்மை இழிவுபடுத்தி இருப்பான். மேலும் நமக்கு தண்டனை வழங்கி இருப்பான். மேலும் மதீனாவில் நெருப்பின் தீப்பிழம்புகள் பற்றி எரிந்திருக்கும்.

எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தின் அரியணையில் அமர்ந்ததும் அந்த வஸிய்யத்தை செயல்படுத்துவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு அடுத்த நாள் மக்களை ஒன்றுகூட்டினார்கள். கிலாஃபத்தின் பைஅத் செய்வதற்காக எல்லா புறமிருந்தும் எண்ணற்ற மக்கள் வருகை தந்திருந்தார்கள். மூன்று நாட்கள் வரை அவர்களின் கூட்டம் இருந்து வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தை பொருத்தமாக கருதினார்கள். மேலும் மக்களை ஜிஹாதில் பங்கு பெறும்படி பொதுக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள். ஏனென்றால் ஈரானிய அரசாங்கத்தின் பொலிவு மற்றும் கம்பீரம் மற்றும் வலிமை வாய்ந்த இராணுவத்தின் ஆற்றல் ஆகியவற்றைக் குறித்து அரபிகள் தொன்று தொட்டே அச்சமடைந்து வந்தனர். ஈராக் பாரசீக அரசாங்கத்தின் தலைநகரமாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின்றி வெற்றி பெற முடியாது என்பது பொது மக்களின் எண்ணமாக இருந்தது. எனவே அனைவரும் மௌனமாக இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பல நாட்கள் வரை அறிவுரை செய்தார்கள். ஆனால் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. இறுதியில் நான்காவது நாள் பார்வையாளர்களின் உள்ளம் அசைந்து விடும் அளவிற்கு மிக உணர்வுப்பூர்வமாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலும் மக்களின் ஈமானிய வெப்பம் பொங்கி எழுந்தது.

ஹஸ்ரத் அபூ உபைத் பின் மஸ்வூது சக்ஃபி முன்னால் வந்து اَنَا لِهٰذَا அதாவது நான் இதற்கு தயாராக இருக்கின்றேன் என்று முழக்கமிட்டார்கள். அந்த ஜிஹாதிற்காக தனது பெயரை கொடுத்தார்கள். அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் சஅத் பின் உபைது (ரலி) மற்றும் சலீத் பின் கைஸ் ஆகியோர் முன்னால் வந்தனர். அவர்கள் முன்னால் வந்ததும் ஈமானிய உணர்வு முஸ்லிம்களின் உள்ளங்களில் அதிகமாக எழுந்தது. மேலும் பெரும் உணர்வுடனும், உத்வேகத்துடனும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஈராக் ஜிஹாதிற்காக தத்தமது பெயரை அனைவரும் கொடுக்கத் தொடங்கினர். இதற்கு முன்பு ஈராக்கிய படையின் தலைமை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கரங்களில் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது இறுதி காலத்தில் சிரியா போரின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அவர்களை சிரியா செல்லும்படி கட்டளையிட்டிருந்தார்கள். தற்போது ஈராக்கின் இஸ்லாமிய படைக்கு தலைமை ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஏற்றிருந்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை ஈராக்கிய போருக்கு தத்தமது பெயரைக் கொடுக்கும்படி அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களும் மதீனாவிற்கு வருகை தந்திருந்தார்கள். அன்னாரும் மிகவும் உணர்வுப்பூர்வமான சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். மக்களே! இந்தப் போரை மிகக் கடுமையானதாகவும், கஷ்டமானதாகவும் கருதாதீர்கள். நாம் பாரசீகர்களுடன் போர் செய்தோம். மேலும் அவர்களை வெற்றி கொண்டோம். இன்ஷா அல்லாஹ் இதற்குப் பிறகும் வெற்றி நமதே ஆகும் என்று கூறினார்கள்.

இந்த அனைத்து சொற்பொழிவுவையும் கேட்ட பிறகு தற்போது மதீனா மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து ஈராக்கிய போரில் பங்கு பெறுவதற்காக முஜாஹித்களின் படை ஆயத்தமானது. தபரி மற்றும் பலாஸரி ஆகியோர் இந்தப் படையின் எண்ணிக்கை ஓராயிரம் என்று கூறியுள்ளனர்.

اَخْبَارُ الطِّوَال என்ற நூலின் ஆசிரியரான அல்லாமா அபூ ஹனீஃபா தீன்வரி அவர்கள் ஐந்தாயிரம் என்று அதன் எண்ணிக்கையை குறித்து கூறுகின்றார்கள்.

மதீனாவிலிருந்து படை புறப்படும் நேரத்தில் அதன் எண்ணிக்கை ஓராயிரமாக இருந்தது என்றும், ஆனால் போர்க்களத்தை அடையும்போது இந்த எண்ணிக்கை ஐந்தாயிரத்தை எட்டி இருந்தது என்றும் தெரிய வருகிறது. ஏனென்றால் பலாஸரி மற்றும் அபூ ஹனீஃபா ஆகியோர் இதனை தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். அதாவது செல்லும் வழியில் படையின் தலைவர் வழியில் எந்த கோத்திரத்தை கடந்து சென்றாரோ அதனை படையில் இணைந்து கொள்ளும்படி அழைப்பு கொடுத்தார். இப்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், அந்தப் படைக்கு யார் அமீராக இருந்தார்? என்பதாகும். ஒரு வகையில் ஹஸ்ரத் முஸன்னா அமீராக இருந்தார்கள். என்றபோதிலும் புதிதாக தயாரான படைக்கு யார் அமீராக இருந்தார்கள்? என்ற கேள்வி எழுகின்றது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நுட்பமான பார்வையானது அபூ உபைது ஷகஃபி அவர்களை தேர்ந்தெடுத்தது. சில மக்களுக்கு இது கஷ்டமாக இருந்தது. அதாவது سَابِقُوْنَ الْاَوَّلُوْن என்ற அன்ஸார் மற்றும் முஹாஜிர்களை விட்டு விட்டு அதாவது எவர்களின் இரத்தத்தால் இஸ்லாமிய செடி வளர்க்கப்பட்டதோ அவர்களை விட்டு விட்டு பிற்காலத்தில் வந்த ஒரு நபர் அமீராக ஆக்கப்பட்டு விட்டாரே என்று அனைவருக்கும் கஷ்டமாக இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

சஹாபிகளுக்கு ஏதாவது சிறப்பம்சம் இருந்தது என்றால் அது அவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய தொண்டுகளின் காரணமாகத்தான் இருந்தது. மேலும் மார்க்கத்தின் சார்பாக தற்காப்பிற்காக போட்டி போட்டுக் கொண்டு எதிரிகளை அவர்கள் எதிர்கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் பின்தங்கி தங்களது உரிமையை இழந்து விட்டார்கள். எனவே இந்த சந்தர்ப்பத்தில் எந்த நபர் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக முதன் முதலில் முன்னால் வந்தாரோ அவரே தலைமைத்துவத்திற்கான உரிமை படைத்தவராக இருந்தனர். ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களுக்குப் பிறகு சஅத் பின் உபைத் மற்றும் சலீத் பின் கைஸ் ஆகியோர் ஈராக்கின் போருக்கான அழைப்பின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலுக்கு செவி மடுத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் நோக்கி இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் எனது குரலுக்கு செவிமடுப்பதில் முந்தி இருந்தால் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதில் முன்னிலை வகித்ததன் காரணமாக உங்கள் இருவரிமே இந்த தலைமைத்துவம் ஒப்படைக்கப்பட்டிருக்கும். சலீத் பின் கைஸ் அவர்களை விட உபைத் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது தொடர்பாக முதல் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை கூறி இருந்தார்கள்.

இந்தப் பணிக்கு மெதுவாக செயல்படக்கூடிய ஒரு நபரின் தேவை உள்ளது. எவர் பொறுமையுடனும் ஆழ்ந்து சிந்தித்தும் போருக்கான நடவடிக்கையை எடுப்பாரோ அவரின் தேவை உள்ளது. ஆனால் சலீத் பின் கைஸ் அவர்கள் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் மிகவும் அவசரக்காரராக இருந்து வந்தார்கள். முந்திக் கொண்டதன்

காரணமாக அபூ உபைதா அவர்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியமிகு சஹாபிகளின் முந்தைய தொண்டுகளையும் கடந்த கால அனுபவங்களையும் புறக்கணிப்பதும் உகந்ததாக இருக்கவில்லை. எனவே அன்னார் ஹஸ்ரத் உபூ உபைது ஷகஃபி அவர்களிடம், நீங்கள் சஹாபிகளின் ஆலோசனைகளிலிருந்து பயன் பெற வேண்டும் என்றும், நிர்வாக விவகாரங்களில் அவர்களின் ஆலோசனைப்படி நடக்கும்படியும் வலியுறுத்திக் கூறி இருந்தார்கள். இவ்வாறு பல்வேறு தரப்பட்ட வரலாற்று புத்தகங்களில் நமக்கு கிடைக்கின்றன. தப்ரி வரலாற்று நூல்களில் இந்த அனைத்து சம்பவங்களும் உள்ளன. அதிலிருந்து இந்தப் பகுதியை நான் தேர்ந்தெடுத்துள்ளேன்.

(மதிப்பிற்குரிய செய்யிது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 7–9 & தாரீக் தப்ரி, தொகுதி 2, பாகம் 2 மொழியாக்கம், பக்கம் 194 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & அபூ ஹனீஃபா தீன்வரி அவர்கள் எழுதிய அஹ்பார் அத்தவால் என்ற நூல் பக்கம் 165, 166 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பல்தான் அல்லாமா பலாதரி பக்கம் 350 – 1987 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் (ரலி) என்ற நூல் பக்கம் 353, 354 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & அல்ஃபாரூக் பக்கம் 78, 79 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ர் 13 ஆம் ஆண்டு ஒரு போர் நடைபெற்றது. அது நமாரிக் மற்றும் கஸ்கர் போர் என்று அழைக்கப்படுகின்றது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் படைகளை அழைத்துக் கொண்டு புறப்படுவதற்கு முன்பாகவே ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் ஹோராவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். (ஹோரா என்பது பழைய ஈராக்கின் ஒரு பகுதியாகும். அது அரேபிய அரசாங்கத்தின் கீழ் இருந்தது. ஃபராத் எனும் பகுதியின் தெற்கில் கூஃபா குடியேற்றம் அடைந்த பகுதியில் அமைந்துள்ளது). வழக்கத்திற்கேற்ப தமது படையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஆயினும் உடனடியாக எப்படிப்பட்ட சூழல் உருவானது என்றால் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களுக்கு தமது படையுடன் பின் வாங்க நேரிட்டது.

இதனுடைய விவரம் இவ்வாறாகும்: ஈரானிய அரசவையில் தலைவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் மத்தியில் சச்சரவும் கருத்து வேறுபாடுகளும் உருவாகி இருந்தன. அதாவது ஒரு புதிய வலிமை வாய்ந்த நபர் வெளிப்பட்டிருந்தார். அவர் கராஸான் என்ற பகுதியின் கவர்னரான ஃபர்ருஹ் ஸாத் என்பரின் மகனான ருஸ்தம் என்பவராக இருந்தார். ஈரானிய அரசவையின் சார்பாக கருப்பர் மற்றும் வெள்ளையர்களுக்கு எஜமானராக ருஸ்தம் ஆக்கப்பட்டிருந்தார். பிரிவினை மற்றும் கருத்து வேறுபாடுகளால் நாட்டின் வலிமை பலவீனப்படுவதற்கு அந்த ஊழியர்கள் அனைவரும் காரணமாக இருந்தனர். தற்போது ருஸ்தமிற்கு கட்டுப்படுவதாக வாதம் புரிந்தனர். ருஸ்தம் என்பவன் ஒரு வீரனாகவும், நன்கு திட்டங்களை தீட்டத் தெரிந்தவனாகவும் இருந்தான். உனான் பகுதியின் தலைமையை தமது கையில் எடுத்தவுடன் முஸ்லிம்கள் வெற்றி கொண்ட பகுதிகளுக்கு தமது ஊழியர்களை அனுப்பி அவன் கிளர்ச்சி செய்ய வைத்தான். ஃபராத் எனும் இடத்தின் சுற்று வட்டாரத்திலிருந்த மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கடுமையான உணர்வை ஊட்டினான். மேலும் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களை எதிர்ப்பதற்காக அவன் ஒரு படையையும் அனுப்பி வைத்தான். இந்த நிலைமையைக் கண்டு ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் கொஞ்சம் பின்வாங்குவதை உகந்ததாக கருதினார்கள்.

மேலும் கீதா என்ற இடத்தை விட்டு விட்டு கஃப்ஃபான் என்ற இடத்திற்கு வந்து முகாமிட்டார்கள். (கஃப்ஃபான் என்பது கூஃபாவிற்கு அருகிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும்). அங்கு ருஸ்தம் இராணுவ நடவடிக்கைகளில் மிகவும் மும்முரமாக இருந்தான். அவன் மிக வலிமை வாய்ந்த படையை ஆயத்தம் செய்து இரண்டு வேறுபட்ட வழிகளில் முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு அனுப்பி வைத்தான். ஒரு படை ஜாபானின் எல்லையில் இருந்தது. அது நமாரிக் என்ற இடத்தில் இறங்கியது. நமாரிக் என்பது ஈராக்கில் கூஃபாவிற்கு அருகிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். மற்றொரு படை நர்ஸி எனும் இடத்தின் எல்லையிலிருந்து கஸ்கர் என்ற இடத்தை நோக்கி அனுப்பப்பட்டது. கஸ்கர் என்பது பாக்தாத் மற்றும் பஸ்ராவிற்கு மத்தியில் தஜல்லா எனும் இடத்திற்கு அருகில் மேற்கு கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அதற்கு அருகில் வாசித் எனும் நகரம் அமைந்துள்ளது.

ஹஸ்ரத் முஸன்னா மதீனாவிலிருந்து திரும்பி தற்போது ஒரு மாதம் கூட ஆகி இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் முஜாஹிதுகளின் படையை அழைத்துக் கொண்டு கஃப்ஃபான் என்ற இடத்தில் அவர்களை சந்தித்தார்கள். கஃப்ஃபான் என்பதும் கூஃபாவிற்கு அருகிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். சில ஆயிரம் முஸ்லிம்களின் இந்தப் படை அந்த நேரத்தில் போர் மைதானத்தை அடைந்திருந்தது. அப்போது ஈராக்கில் பொதுவான சூழலில் முஸ்லிம்கள் உணர்வுப்பூர்வமாக இருக்கவில்லை. வெற்றி கொள்ளப்பட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றாக அவர்களின் கரங்களிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கஃப்ஃபான் எனும் இடத்தில் படைகளை ஒன்றுகூட்டும் நோக்கத்திற்காக சில நாட்கள் தங்கி விட்ட பிறகு நமாரிக் எனும் இடத்தை நோக்கி சென்றார்கள். அங்கு ஒரு வலிமை வாய்ந்த ஈரானிய படை ஜாபான் எனும் ஒரு முதிர்ந்த அனுபவம் வாய்ந்த ஈரானிய தளபதியின் தலைமையில் அங்கு முகாமிட்டிருந்தது. ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் படையை ஒழுங்குபடுத்தினார்கள். ஹஸ்ரத் முஸன்னா அவர்களின் கடிதம் ஒன்றை கொடுத்தார்கள். மீமனா எனும் படையின் தலைமை வாலிக் பின் ஜீதாரா அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. மைஸர் எனும் படையின் தலைவராக அம்ர் பின் ஹைஷம் நியமிக்கப்பட்டார். ஈரானிய படையின் இரண்டு பக்கத்தின் தலைமை ஜுஷனஸ் மாஹ் மற்றும் மர்தான் ஷா ஆகியோர் தலைமை தாங்கி வந்தனர்.

இந்தப் போரில் இஸ்லாமிய நல்லொழுக்கத்தின் முன்னுதாரணம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அது குறித்து மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் தனது கருத்தாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

இதில் நமக்கு இஸ்லாமிய நல்லொழுக்கத்தின் ஒரு முன்னுதாரணம் வெளிப்படுகிறது.

அது இதுவாகும்: அதாவது நமாரிக் என்ற இடத்தில் மிகக் கடுமையான போர் ஏற்பட்டது. மேலும் ஈரானிய படை தோல்வி கண்டது. ஈரானிய படையின் தளபதியான ஜாபான் உயிருடன் கைது செய்யப்பட்டார். மதர் பின் ஃபில்லா அவர்கள் ஜாபான் என்பவரை கைது செய்திருந்தார்கள். ஆனால் அவரால் அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவரது அறியாமையிலிருந்து ஜாபான் பயன் பெற்றவாறு அன்னாருக்கு ஃபித்யா கொடுத்தான். மேலும் விடுதலை பெற்றுக் கொண்டான். சிறிது நேரத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் மீண்டும் ஜாபானை கைது செய்து விட்டனர். அவர் ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். மேலும் ஈரானிய படையில் ஜாபானிற்கு என்ன அந்தஸ்து இருந்தது என்பதும் அன்னாருக்கு கூறப்பட்டது. ஆனாலும் ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களால் இதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு நபரை ஒரு முஸ்லிம் வீரர் ஒரு முறை ஃபித்யா பெற்றுக் கொண்டு விடுதலை செய்து விட்டார். எனவே அவரை மீண்டும் கைதியாக ஆக்கிக் கொள்வது உகந்ததல்ல என்று அன்னார் கருதினார்கள்.

எனவே ஜாபான் ஒரு வகையில் அரசன் என்ற அந்தஸ்தை பெற்றிருக்கின்றார் என்று மக்கள் மீண்டும் முறையிட்டனர். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் என்னால் உடன்படிக்கையை மீற முடியாது என்று அன்னார் கூறி விட்டார்கள். எனவே அவர் விடுதலை செய்யப்பட்டு விட்டார்.

இந்த சம்பவத்திலிருந்து இஸ்லாமிய படையிடம் இருந்த செயல் திட்டம் பற்றிய நல்லொழுக்கம் வெளிப்படுகின்றது. மேலும் முஸ்லிம்கள் மிகப் பெரிய போர் பயன்களை பெறுவதில் நல்லொழுக்கத்தின் தரத்தை கைவிட்டு விடவில்லை என்பதும் தெரிய வருகின்றது.

(மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 9–12 & தாரீக் தப்ரி, தொகுதி 2 பக்கம் 362, 363 – 2012 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 351, தொகுதி 2 பக்கம் 434

பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஸகாதிய்யா போர் இது ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு நடைபெற்றது. நமாரிக் என்ற போரிலிருந்து தோல்வியுற்று ஈரானிய படை கஸ்கர் எனும் இடத்தை நோக்கி ஓடியது. அங்கு ஏற்கனவே ஈரானிய படையின் தளபதி நர்ஸி என்பவன் ஒரு பெரும் படையை திரட்டி முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக இருந்தான். ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள், அவனை எதிர்கொள்வதற்காக கஸ்கர் எனும் இடத்தை நோக்கி முன்னேறினார்கள். ஈரானிய படையின் தளபதியாக இருந்த கஸ்கர் ஈரானிய அரசாங்கத்தில் தனித்துவம் வாய்ந்த சிறப்பான அந்தஸ்தை பெற்றிருந்தான். மேலும் அவனுக்கும் அவனது படைக்கும் இரண்டு கரங்களாக பிந்தவிய்யா மற்றும் தேர்வயா என்ற தளபதிகள் இருந்தனர். அவர்கள் ஈரான் நாட்டினுடைய பாஸானி அரசர்களுக்கு நெருங்கிய மற்றும் ஆழமான உறவினர்களாக இருந்தனர்.

ஈரானிய அரசவைக்கு நமாரிக் போரில் ஏற்பட்ட தோல்வி குறித்த செய்தி கிடைத்தது. மேலும் நர்ஸிக்காக மேலும் படைகளை அனுப்பி உதவி செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தான். ஆனால் ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் தமது படையை இடம் பெயரச் செய்து வேகமாக அழைத்துக் கொண்டு நர்ஸியின் படைக்கு மேலும் உதவிகள் வருவதற்கு முன்பாகவே கஸ்கர் எனும் கிராமப் பகுதியை எதிர்கொண்டு விட்டார்கள். ஸகாதிய்யா எனும் மிகவும் பிரபல்யமான இடத்தில் தாக்குதல் தொடுத்தார்கள். ஸகாதிய்யா எனும் இடத்தில் போரிட்ட பிறகு அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. பெரும் போருக்குப் பிறகு ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் கஸ்கரின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் ஒன்றுகூடியிருந்த எதிரிகளை எதிர்கொள்வதற்காக இஸ்லாமிய படைகளையும் அனுப்ப தொடங்கி விட்டார்கள்.

(மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 12–13 & தாரீக் தப்ரி, தொகுதி 2, பக்கம் 364 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து பாருஸமா என்ற போரைப் பற்றிய குறிப்பு உள்ளது. இதுவும் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு நடந்தது. கஸ்கர் மற்றும் ஸகாதிய்யா ஆகிய ஊர்களுக்கு மத்தியிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். அங்கு ஈரானிய ஜெனரலாக இருந்த ஜாலினியூஸ் என்பவனுடன் போர் நடந்தது. அவன் ஜாபானிற்கு உதவி செய்வதற்காக வந்திருந்தான். ருஸ்தம் நர்ஸிக்கு உதவி செய்வதற்காக ஒரு ஈரானிய தளபதியின் தலைமையில் ஒரு படையை கஸ்கர் எனும் இடத்தை நோக்கி அனுப்பி வைத்திருந்தான். ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களுக்கு அது பற்றி தகவல் கிடைத்திருந்தது. அன்னார் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டு ஜாலினியூஸ் படை வருவதற்கு முன்பாகவே நர்ஸி என்பவரின் படையின் ஒரு பிரிவை எதிர்கொண்டார்கள். மேலும் அதனை தோற்கடிக்கச் செய்து எதிரியின் படை வலிமைக்கு சேதாரத்தை ஏற்படுத்தினார்கள்.

தற்போது ஜாலினியூஸ் பாருஸ்ஸமா என்ற பகுதியில் பாகுஸியாஸா என்ற இடத்தில் படை முகாமிட்டது. பஸ்ரா மற்றும் கூஃபாவிற்கு மத்தியிலுள்ள இடங்கள் அர்ஸே ஸவாத் என்று அழைக்கப்படுகின்றது. மேலும் பாருஸ்ஸமா மற்றும் பாகுஸியாஸா என்பது இரண்டு நகரங்களாகும். ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் பாகுஸியாஸா என்ற இடத்தை அடைந்தார்கள். ஒரு சிறிய போருக்குப் பிறகு ஈரானிய படை தோல்வியுற்றது. ஜாலினியூஸ் போர் மைதானத்திலிருந்து ஓடி விட்டான். ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் அங்கு தங்கியிருந்து சுற்றுவட்டாரப் பகுதிகளை முழுமையாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள். இது தப்ரி என்னும் வரலாற்று ஆசிரியரின் கூற்றாகும். பலாஸரி என்பவர் இவ்வாறு எழுதியுள்ளார். ஜாலினியூஸ் சில தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டான். எனினும் வரலாற்று ஆசிரியர்களான இப்னு கல்தூன் மற்றும் இப்னு அஸீர் ஆகியோர் தப்ரியின் கருத்தை ஆமோதித்துள்ளார்கள்.

(மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 14 & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் (ரலி) என்ற நூல் பக்கம் 357 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 261 – பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஜிஸ்ர் போர் குறித்து ஏற்கனவே சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இங்கு கூறுவதும் அவசியமாகும். அதை நான் எடுத்துரைக்கின்றேன். ஜிஸ்ர் போர் இது ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஃபராத் நதிக்கரையில் முஸ்லிம்கள் மற்றும் ஈரானியர்களுக்கு மத்தியில் இந்தப் போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் தரப்பில் ஹஸ்ரத் உபைத் ஷகஃபி போர்ப்படை தளபதியாக இருந்தார்கள். அதே நேரம் ஈரானியர்கள் சார்பில் பெஹ்மன் ஜாஸ்வியா படைத்தளபதியாக இருந்தான். முஸ்லிம் படையின் எண்ணிக்கை பத்தாயிரமாக இருந்தது. அதே நேரம் ஈரானிய படையின் எண்ணிக்கை முப்பது ஆயிரமாகவும், அவர்களிடம் 300 யானைகளும் இருந்தன. ஃபராத் நதி இடையில் அமைந்திருந்ததன் காரணத்தால் இரண்டு பிரிவினர்களுக்கு மத்தியிலும் சிறிது காலம் வரை போர் தடை பட்டிருந்தது. எந்த அளவுக்கென்றால் இரு தரப்பின் சம்மதத்துடன் ஃபராத்தில் ஜிஸ்ர் எனும் ஒரு பாலம் தயார் செய்யப்பட்டது. இதே பாலத்தின் காரணமாக இந்தப் போர் ஜிஸ்ர் போர் என்று கூறப்படுகின்றது.

பாலம் தயாராகிவிட்டபோது பெஹ்மன் ஜாஸ்வியா, ஹஸ்ரத் அபூ உபைது அவர்களுக்கு நீங்கள் நதியைத் தாண்டி எங்களிடம் வருகின்றீர்களா? அல்லது நாங்கள் தாண்டி வருவதற்கு எங்களுக்கு அனுமதி தருகின்றீர்களா? என்று செய்தி கூறி அனுப்பினான். முஸ்லிம் படை நதியை தாண்டிச் சென்று எதிரிகளுடன் சண்டையிட வேண்டும் என்பது ஹஸ்ரத் அபூ உபைது அவர்களின் கருத்தாக இருந்தது. அதே நேரத்தில் ஹஸ்ரத் ஸலீத் உட்பட படையின் ஏனைய தலைவர்களின் கருத்து அன்னாரின் கருத்திற்கு எதிரானதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் ஃபராத் நதியை தாண்டிச் சென்று ஃபாரஸீகர்களின் படையின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். சிறிது நேரம் வரை போர் அப்படியே நடந்து வந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு பெஹ்மன் ஜாஸ்வியா தமது படை சிதறுண்டு செல்வதைக் கண்டான். அப்போது யானைகளை முன் நிறுத்தும்படி கட்டளையிட்டான். யானைகள் முன்நிறுத்தப்பட்டதால் முஸ்லிம்களின் அணிகள் ஒழுங்கற்றதாக ஆனது. இஸ்லாமிய படை அங்கும் இங்கும் விலகத் தொடங்கியது.

ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் முஸ்லிம்களிடம், அல்லாஹ்வின் அடியார்களே! யானைகள் மீது தாக்குதல் நடத்துங்கள். அவற்றின் தும்பிக்கைகளை வெட்டி விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் இவ்வாறு கூறியவாறு முன்னேறினார்கள். ஒரு யானையின் மீது தாக்குதல் நடத்தி அதன் தும்பிக்கையை வெட்டி விட்டார்கள். ஏனைய இஸ்லாமிய படையும் இதைக்கண்டு வேகமாக சண்டையிடத் தொடங்கியது. ஏராளமான யானைகளின் தும்பிக்கைகளையும், கால்களையும் வெட்டி அதில் சவாரி செய்தவர்கள் கொல்லப்பட்டார்கள். தற்செயலாக ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் ஒரு யானைக்கு முன்னால் வந்து விட்டார்கள். அன்னார் தாக்குதல் நடத்தி அதன் தும்பிக்கையை வெட்டி விட்டார்கள். ஆயினும் அன்னார் அந்த யானையின் கால்களுக்கு கீழே வந்து விட்டார்கள். இவ்வாறு (யானையின் கால்களுக்குக் கீழ்) நசுங்கி அன்னார் ஷஹீதாகி விட்டார்கள்.

தப்ரி வரலாற்று நூலில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூ உபைது அவர்களின் மனைவி ஸஃமா அவர்கள் போருக்கு முன்பாக ஒரு கனவு கண்டிருந்தார்கள். அதில் ஒரு நபர்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

விண்ணிலிருந்து சுவர்க்கத்தின் ஒரு பானத்தை ஒரு பாத்திரத்தில் கொண்டு வந்தார். அதனை ஹஸ்ரத் அபூ உபைது மற்றும் ஜபர் பின் அபூ உபைது குடித்தார்கள். அதேபோன்று அன்னாரின் குடும்பத்தின் சில மக்களும் அருந்தினார்கள். ஸவ்மா அவர்கள் இந்தக் கனவை தனது கணவரிடம் எடுத்துரைத்தார். இந்தக் கனவின் விளக்கம் ஷஹாதத் ஆகும் என்று ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் மக்களிடம் இவ்வாறு வஸிய்யத் செய்தார்கள்: ஒருவேளை நான் ஷஹீதாகி விட்டால் ஜபர் போர் தளபதியாக இருப்பார். அவரும் ஷஹீதாகி விட்டால் இன்ன இன்ன நபர் தளபதியாக இருப்பார்கள் என்று வஸிய்யத் செய்திருந்தார்கள்.

ஆக எந்தெந்த நபர் கனவில் அந்த பாத்திரத்திலிருந்து பானத்தை அருந்தி இருந்தார்களோ அவர்களை ஹஸ்ரத் அபூ உபைது அவர்கள் வரிசைக்கிரமத்துடன் படைத் தளபதியாக நியமித்திருந்தார்கள். மேலும் ஒருவேளை அபுல் காஸிமும் ஷஹீதாகி விட்டால் பின்னர் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் உங்களுடைய படைத் தளபதியாக இருப்பார் என்றும் அன்னார் கூறினார்கள்.

ஸவ்மா அவர்களின் இந்த கனவு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. இந்தப் போரில் ஹஸ்ரத் அபூ உபைது அவர்களுக்குப் பிறகு ஆறு நபர்கள் ஒவ்வொருவராக தலைமைத்துவக் கொடியை ஏந்திக் கொண்டு சென்றார்கள். மேலும் ஒவ்வொருவராக ஷஹீதாகிக் கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் எட்டாவது நபராக இருந்தார்கள். அன்னார் இஸ்லாமிய கொடியை எந்திக் கொண்டு மீண்டும் ஆவேசத்துடன் தாக்குதல் தொடுக்க எண்ணம் கொண்டார்கள். ஆனால் இஸ்லாமிய படையின் அணிகள் சிதறுண்டு விட்டன. தொடர்ந்து 7 தலைவர்கள் ஷஹீதானதை பார்த்து விட்டு மக்கள் ஓடத் தொடங்கி இருந்தார்கள். சிலர் நதியில் குதித்தும் விட்டார்கள். ஹஸ்ரத் முஸன்னா (ரலி) மற்றும் அன்னாரின் தோழர்கள் வீரத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) காயமுற்று விட்டார்கள். அன்னார் சண்டையிட்டவாறு ஃபிராத் நதியைத் தாண்டி திரும்பி வந்து விட்டார்கள். இந்த சம்பவத்தில் முஸ்லிம்களுக்கு ஏராளமான பாதிப்பு ஏற்பட்டது. முஸ்லிம்கள் தரப்பில் 4000 நபர்கள் ஷஹீதாகி இருந்தனர். அதே நேரம் ஈரானியர்கள் தரப்பில் 8000 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தத் தோல்வி முஸ்லிம்களுக்கு நீண்ட நேரம் வரை துன்பம் அளிக்கும் விளைவுகளை உருவாக்குவதற்கு காரணியாக இருந்தது. ஆனால் நற்பேறு என்னவென்றால், இயற்கையாக சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது எதிரிகளால் முஸ்லிம்களை பின்தொடர முடியாமல் போனது. ஏனென்றால் ஈரானிய அரசவை ஊழியர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக பெஹ்மன் ஜாஸ்விய்யாவிற்கு திரும்பிச் செல்ல நேரிட்டது.

இப்னு அஸீர் இதற்கான காரணமாக இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது ஈரானியர்களின் தலைநகரமான மதாயின் நகரத்தில் அரசவை ஊழியர்களில் ஒருவராக இருந்த ருஸ்தமிற்கு எதிராக கிளர்ச்சி செய்திருந்தனர்.

(மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் ஃபீது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 18–21 & தாரீக் தப்ரி, தொகுதி 2, பாகம் 2 மொழியாக்கம், பக்கம் 229 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & தாரீக் இப்னு கல்தூன் தொகுதி 3, பாகம் 1 மொழியாக்கம், பக்கம் 270 – 273 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னு அஸீர் பக்கம் 311)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் ஜிஸ்ர் போர் தொடர்பாக சிலவற்றை எடுத்துரைத்துள்ளார்கள்:

இஸ்லாதிற்கு ஏற்பட்ட மாபெரும் மற்றும் அபாயகரமான தோல்வி என்பது ஜிஸ்ர் போர் தோல்வியாக இருந்தது. ஈரானியர்களுக்கு எதிரில் முஸ்லிம்களின் ஒரு பெரும் படை சென்றது. ஈரானிய படைத்தளபதி நதிக்கு அப்பால் தனது படையை அணிவகுத்து அவர்களுக்காக காத்திருந்தார். இஸ்லாமிய படை ஆவேசத்தில் முன்னேறிச் சென்று அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது. மேலும் அவர்களை பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னேறிச் சென்றது. ஆயினும் அது ஈரானிய தளபதியின் சதியாக இருந்தது. அவன் படையின் ஒரு பகுதியை அனுப்பி பாலத்தை கைப்பற்றிக் கொண்டான். மேலும் முஸ்லிம்கள் மீது திடீர் தாக்குதல் தொடுத்து விட்டான். முஸ்லிம்கள் பின்வாங்கியபோது பாலத்தில் எதிரிகளின் கட்டுப்பாடு இருப்பதை கண்டார்கள். பதற்றமடைந்து எதிர் திசையில் சென்றபோது எதிரி கடுமையாக தாக்குதல் தொடுத்தான். முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கை நதியில் குதிக்கும் நிர்பந்தத்திற்கு ஆளானது. மேலும் அழிவிற்கும் ஆளானது. முஸ்லிம்களுக்கும் எப்படிப்பட்ட அபாயகரமான பாதிப்பாக இது இருந்ததென்றால் மதீனா வரை இதனால் பதற்றம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவாசிகளை ஒன்றுகூட்டினார்கள். இப்போது மதீனா மற்றும் ஈரானுக்கு இடையில் எந்தத் தடையும் எஞ்சியிருக்கவில்லை. மதீனா முற்றிலும் பாதுகாப்பற்றதாக இருக்கின்றது. சில நாட்களில் எதிரிகள் இங்கு வந்தடைந்து விடக்கூடும். எனவே நானே தளபதியாக செல்ல விரும்புகின்றேன் என்று அன்னார் கூறினார்கள்.

எஞ்சிய மக்கள் இந்த ஆலோசனையை விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை தவறுதலாக தாங்கள் மரணித்து விட்டால் முஸ்லிம்கள் சிதறுண்டு விடுவார்கள். முஸ்லிம்களின் ஒற்றுமை சீர்குலைந்து விடும். எனவே வேறொருவரை அனுப்ப வேண்டும். நீங்கள் சுயமே செல்லக்கூடாது என்று கூறினார்கள். அப்போது சிரியா நாட்டில் ரோமானியர்களுடனான போரில் மும்முரமாக இருந்த ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு உங்களால் எவ்வளவு படையை அனுப்ப முடியுமோ அனுப்புங்கள். ஏனென்றால் தற்போது மதீனா முற்றிலும் பாதுகாப்பற்றதாக ஆகிவிட்டது. ஒருவேளை எதிரியை உடனடியாக தடுத்து நிறுத்தவில்லையென்றால் அவர்கள் மதீனாவை கைப்பற்றி விடுவார்கள் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

(மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா கே ஸாலானா இஜ்திமா..... மே பக்ஸ் அஹம் ஹிதாயாத், அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 56, 57)

இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் நான் எடுத்துரைப்பேன். இது இந்தப் போரைப் பற்றிய குறிப்பாக இருந்தது. ஏனைய போர்களைப் பற்றியும் மேலும் விளக்கத்துடன் எதிர்வரும் நாட்களில் கூறப்படும்.

இப்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பையும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அவர்களின் ஜனாஸா (காயிப்) தொழுகைகளையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். அதில் முதலாவது நற்குறிப்பு ஃபத்ஹி அப்துஸ் ஸலாம் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னாரின் முழுப் பெயர் ஃபத்ஹி அப்துஸ் ஸலாம் முபாரக் ஆகும். அன்னார் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்கள். 75 வது வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தந்தையார் நக்ஷ்பந்தி எனும் வழிமுறையை பின்பற்றக்கூடியவராக இருந்தார். அன்னார் தனது ஒரு பிள்ளையை மார்க்கக் கல்விக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்று உடன்படிக்கை எடுத்திருந்தார். ஃபத்ஹி ஸாஹிப் அவர்கள் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஃபத்ஹி ஸாஹிப் அவர்கள் 10 வயதில் திருக்குர்ஆன் மனனத்தை முழுமை செய்து விட்டார்கள். திருக்குர்ஆனின் மீது கொண்ட அன்பின் காரணமாக ஃபத்ஹி ஸாஹிப் அவர்களின் தந்தையாரும் அன்னாருடன் திருக்குர்ஆனை மனனம் செய்யத் தொடங்கினார்கள். மேலும் முழுத் திருக்குர்ஆனையும் மனனம் செய்தார்கள். பின்னர் இறைவனுடைய அருள் எவ்வாறு வெளிப்பட்டது என்றால் அன்னாரின் தந்தையார் 88 வது வயதில் பைஅத்தும் செய்து விட்டார்கள்.

திருக்குர்ஆன் மனனம் செய்த பிறகு ஃபத்ஹி ஸாஹிப் அவர்கள் அல்–அஸ்கர் திட்டத்தின் கீழ் ஓர் உயர்நிலைப் பள்ளியில் பெரும் வெற்றி பெற்று கல்வியை முழுமை செய்தார்கள். பின்னர் காஹிரா பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியலில் பட்டம் பெற்றார்கள். மாணவ பருவத்தில் வாசிப்பின் மீது கொண்ட எல்லையற்ற ஆர்வத்தின் காரணமாக தனது செலவுகளை மிச்சப்படுத்தி சேமித்து புத்தகம் வாங்கி வந்தார்கள். மேலும் அதை வாசித்து வந்தார்கள்.

பின்னர் எகிப்து நாட்டின் விமானப்படையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்கள். அன்னார் சில இஸ்லாமிய புரட்சியாளர்களின் இயக்கங்களுடன் சேர்ந்து மறைமுகமான சதித்திட்டங்களில் பங்கு

பெற்றார்கள் என்று அன்னார் மீது பழி சுமத்தப்பட்டது. உள்ளபடியே அன்னார் அவர்களுக்கு எதிராக இருந்தார்கள். அவர்களின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்து வந்தார்கள். எவ்வாறிருப்பினும் இந்த குற்றச்சாட்டின் கீழ் ஒரு நீண்ட காலம் சிறையில் கழித்த பிறகு அன்னார் விடுதலை செய்யப்பட்டார்கள். அதன் பிறகு அன்னார் ஈராக் சென்று விட்டார்கள். சிறிது காலம் பொறியாளராக அங்கு பணி செய்தார்கள்.

1991 ஆம் ஆண்டில் ஈராக்கில் போர் நடைபெற்ற சமயத்தில் அன்னார் மிக அபாயகரமான காலத்தை கழித்தார்கள். அன்னார் எந்தப் பகுதியில் வசித்து வந்தார்களோ அங்கு ஓர் இரவில் பத்து குண்டுகள் வீசப்பட்டன. அன்னார் தனது குடும்பத்தினருடன் துஆக்களில் மும்முரமாக ஈடுபட்டார்கள். அல்லாஹ் அற்புதமான முறையில் அன்னாரை பாதுகாத்தான்.

பின்னர் அன்னார் உர்தன் நாட்டிற்குச் சென்று விட்டார்கள். மோதஸலி பிரிவில் இணைந்து கொண்டார்கள். பின்னர் எகிப்திற்கு வந்தார்கள். மேலும் அஹலே குர்ஆன் பிரிவில் ஓரளவிற்கு ஈர்ப்பு கொண்டார்கள். ஜமாஅத்தைப் பற்றியும் அறிமுகம் ஏற்பட்டது. அஹ்மதிய்யத்தில் அனைத்து பிரச்சனைகளுக்குரிய தீர்வும் அன்னாருக்கு கிடைத்தது. எனவே அன்னார் பைஅத் செய்து விட்டார்கள். பைஅத் செய்த சம்பவத்தைப் பற்றி ஃபத்ஹி சாஹிப் அவர்களே இவ்வாறு கூறுகின்றார்கள்:

1995 ஆம் ஆண்டில் எகிப்து நாட்டில் இப்னு குல்தூன் என்ற பெயருடைய ஒரு கல்வி நிறுவனத்தின் தலைமையகத்தில் பல்வேறு சொற்பொழிவுகள் நிகழ்ந்து வந்தன. அங்கு பல முறை சொற்பொழிவு ஆற்றுவதற்கும், பல்வேறு தலைப்புகளில் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் எனக்கு நற்பேறு கிடைத்தது. 1998 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய முஸ்தஃபா சாபித் சாஹிப் அவர்கள் அந்த தலைமையகத்தில் எனது சொற்பொழிவை கேட்டார்கள். மிகவும் பாராட்டினார்கள். தனது வீட்டிற்கு அழைத்தார்கள். அங்கு எனக்கு மூன்று மணி நேர வீடியோ கேஸட் ஒன்றை காட்டினார்கள். அதில் மதிப்பிற்குரிய ஹல்மி அஷ்–ஷாஃபி சாஹிப் மர்ஹூம் அவர்கள் தஜ்ஜாலைக் குறித்து ஹதீஸ்களில் இடம் பெற்றுள்ள விஷயங்களுக்கு எப்படிப்பட்ட விளக்கங்களை வழங்கினார்கள் என்றால் அவை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஃபத்ஹி சாஹிப் அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: நான் கேட்டபோது இந்த விளக்கம் தஜ்ஜாலைக் கொலை செய்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தஃப்ஸீர் ஆகும் என்று சாபித் சாஹிப் மர்ஹூம் என்னிடம் கூறினார்கள். 1999 ஆம் ஆண்டில் முஸ்தஃபா சாபித் சாஹிப் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற புத்தகத்தை எனக்கு வழங்கினார்கள். அது என்னிடத்தில் ஒரு வினோதமான புரட்சியை ஏற்படுத்தியது. நான் இமாம் மஹ்தி (அலை) அவர்களைப் பற்றி விரிவாக ஆராய வேண்டும் என்று முடிவெடுத்தேன். நான் எனது சொந்த ஆய்வின் மூலமாக நாஸிக் – மன்ஸூக் என்ற கொள்கை தவறானது. மேலும் அது திருக்குர்ஆனின் கண்ணியத்திற்கு எதிரான கொள்கை என்ற முடிவிற்கு வந்தேன். மேலும் மார்க்க சுதந்திரத்தை விரும்பக்கூடியவனாக நான் இருந்தேன். அஹ்மதிய்யத்தைப் பற்றி நான் ஆய்வு செய்ய துவங்கியபோது அஹ்மதிய்யத்தும் இதே கருத்துக்களை பிரச்சாரம் செய்கின்றது என்பதை கண்டு கொண்டேன். பின்னர் சில திருக்குர்ஆன் வசனங்களைக் குறித்து கேள்வி கேட்டபோது முஸ்தஃபா சாபித் சாஹிப் அவர்கள் எனக்கு Five volume commentary ஐ வழங்கினார்கள். மேலும் இதில் அனைத்து கேள்விகளுக்கும் பதில் உள்ளது என்றும் கூறினார்கள். அதில் எனது அனைத்து கேள்விகளுக்குரிய பதிலும், எனது சிந்தனையின் வழிமுறைக்கேற்பவும், எனது எதிர்பார்ப்பிற்கேற்பவும் அமைந்திருப்பதைக் நான் கண்டேன்.

ஃபத்ஹி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இறை வஹி இறங்குவதாக பொய் வாதம் செய்வதென்பது மாபெரும் அநீதியாகும். ஆனால் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் எடுத்து வந்துள்ள அனைத்து விஷயங்களும் உண்மை மற்றும் நேர்வழியையும், ஆன்மீக ஞானங்களையும் உள்ளடக்கி இருக்கின்றன என நான் சிந்தித்தேன். இந்த அளவிற்கு உண்மையான ஞானங்களை இந்த அளவு எண்ணிக்கையில் இந்த முழு நூற்றாண்டில் வேறு எந்த நபருக்கும் அல்லாஹ் வழங்கவில்லை. அவ்வாறிருக்க மாபெரும் அநீதியிழைத்து இறை வஹி இறங்குவதாக வாதம் செய்யக்கூடிய பொய்யான நபருக்கா அல்லாஹ் இந்த மகத்துவமிக்க அருட்கொடையை வழங்குவான் என்றும் நான் சிந்தித்தேன். இறுதியில் துஆக்கள் செய்து படித்து சிந்தித்து 2001 ஆம் ஆண்டில் முஸ்தஃபா சாபித் சாஹிப் எகிப்திற்கு வருகை தந்திருந்தபோது நான் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டு விட்டேன் என்று கூறினேன். உணர்ச்சிப் பெருக்கின் காரணமாக சிறிது நேரம் அவர்கள் எனது விஷயத்தை நம்பவில்லை. அதன் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அரபி புத்தகங்களை நான் படிக்கத் தொடங்கினேன். கருத்து செறிவுமிக்க ஒரு மாபெரும் கடல் என் முன் சீற்றம் கொண்டதாக நான் உணர்ந்தேன்.

ஃபத்ஹி சாஹிப் அவர்கள் ஜமாஅத்திற்காக கல்வித் தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள். 2005 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் புத்தகமான Life of Muhammad – ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்தை ஆங்கிலித்திலிருந்து அரபியில் மொழிபெயர்த்தார்கள். அல்ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வந்தார்கள். மிகவும் உணர்வுப்பூர்வமான முறையில் ஆதாரப்பூர்வமாக விளக்கமான பதில்களை வழங்கி வந்தார்கள். அதனை பார்வையாளர்கள் மிகவும் விரும்பி வந்தார்கள்.

ஒரு எகிப்திய பாதிரி திருக்குர்ஆன் மீது ஆட்சேபனைகளை செய்து ஒரு தொடர் ஒன்றை நடத்தினார். هل القرآن كلام الله؟ அதாவது திருக்குர்ஆன் இறைவேதமா? அதன் தலைப்பாக இருந்தது. இதற்கு பதிலாக ஃபத்ஹி சாஹிப் அவர்கள் 2006 ஆம் ஆண்டில் ‘‘نَعَمْ! اِنَّهُ كَلَامُ اللهِ’’ ஆம்! நிச்சயமாக இது இறைவேதம் தான் என்ற தலைப்பில் தொடர் நிகழ்ச்சிகளை பதிவு செய்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அரபி கஸீதாக்களின் விளக்கங்களை உள்ளடக்கிய ரூஹுல் குத்ஸ் என்ற நிகழ்ச்சியையும் நடத்தினார்கள். அதில் கஸீதாக்களின் சொற்பொருளையும் தனித்தன்மை வாய்ந்த விளக்கங்களையும் மிகவும் அழகிய முறையில் தெளிவுபடுத்தினார்கள். அதுமட்டுமின்றி ஏராளமான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வந்தார்கள். அதில்

نَبُوَّاتُ تَحَقَّقَتْ அதாவது முன்னறிவிப்புகள் நிறைவேறி விட்டன. பராஹீனே அஹ்மதிய்யாவின் அறிவார்ந்த ஞானங்கள், ஃபீ ஸமாவாத்தில் குர்ஆன், இஸ்லாமிய வரலாறு, காத்தமுன் நபிய்யீன் போன்ற நிகழ்ச்சிகளும் அடங்கும். இதுமட்டுமின்றி ஜமாஅத் அளவிலும் தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள். உள்ளூர் ஜமாஅத்தில் ஒரு நீண்ட காலம் வரை தப்லீக் செயலராகவும் தொண்டற்றி வந்துள்ளார்கள். தம்மை வக்ஃப் செய்வதற்கு முன்னிலைப்படுத்தினார்கள். பல ஆண்டுகள் வரை வாழ்க்கையை அர்ப்பணித்தவராக ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்துள்ளார்கள். ஜமாஅத் சென்டர்களில் தர்ஸும் கொடுத்து வந்துள்ளார்கள்.

அன்னாரின் மகனான இப்ராஹீம் ஃபத்ஹி சாஹிப் கூறுகின்றார்: எனது மர்ஹூம் தந்தை சூரா ஃபாத்திஹாவின் ஒளியில் உண்மையான வாழ்க்கையை வாழக்கூடியவராக இருந்தார்கள். அன்னாரின் வாழ்க்கை கிலாஃபத்தின் அருட்கொடையின் ஒளியால் நிறைந்திருந்தது. காலத்தின் கலீஃபாவிற்கு அன்பு மற்றும் மரியாதை செலுத்துவதில் உணர்வுப்பூர்வமான மற்றும் வினோதமான உணர்வுகளை கொண்டிருந்தார்கள். அன்னாரைப் பொருத்தவரை அனைத்து கஷ்டங்களுக்குரிய தீர்வும், அனைத்து கஷ்டங்களையும், பிரச்சனைகளையும் புரிவதற்கும், அல்லாஹ்வின் பக்கம் செல்வதற்கு உரிய வழியை அறிந்து கொள்வதற்கும் கிலாஃபத் என்ற ஒரேயொரு வழி தான் உள்ளது.

அன்னார் கூறுகின்றார்: எனது தந்தையார் அவர்கள் சொல்லிலும், செயலிலும் முழுமையாக உண்மையுடன் செயல்படுவதில் பிரபலமானவராக இருந்தார்கள். ஒவ்வொரு பணிக்கு முன்பும் எப்போதும் துஆ செய்வார்கள். மேலும் இறைவனின் சன்னிதானத்தில் மன்றாடி வந்தார்கள். அவரிடத்தில் எவராவது எனக்கு அறிவுரை செய்யுங்கள் என்று கூறினால் அவரிடம் துஆ செய்யுங்கள். மேலும் அல்லாஹ்விடத்தில் நேரான வழியை வேண்டுங்கள். காலத்தின் கலீஃபாவிற்கு துஆவிற்கு எழுதுங்கள் என்று கூறுவார்கள்.

அன்னார் மிக ஆழமான அறிவுடையவராகவும், பரந்துபட்ட தகவல்களை கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னார் மிகவும் அதிகமாக வாசித்து வந்தார்கள். எல்லா வகையான கல்வியை உள்ளடக்கிய

புத்தகங்களையும் படித்து வந்தார்கள். புதிய சிந்தனைகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார்கள். வாசிப்பால் கிடைத்த அறிவையும், நுட்பமான மார்க்க விஷயங்களை புரிவதிலும், புரிய வைப்பதிலும் செலவிட்டு வந்தார்கள். அன்னாரின் பாடம் நடத்தும் முறை மிகவும் அழகாக இருந்தது. அதற்கிடையில் சில முறை நகைச்சுவையும் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை எப்போதும் படித்து வந்தார்கள். அதிலிருந்து ஞானத்தின் முத்துக்களை எடுத்து அதனை தனது அன்றாட வாழ்க்கையின் வழிகாட்டியாக ஆக்கிக் கொண்டார்கள். ஜுமுஆ நாளன்று தனது சொற்பொழிவிலும், MTA நிகழ்ச்சிகளிலும் இந்த ஞானங்களை எடுத்துரைத்து வந்தார்கள். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு மிக அதிகமான ஆர்வம் இருந்தது.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நோய்வாய்ப்பட்டிருந்தபோதிலும், சுவாசிப்பதில் கஷ்டங்கள் இருந்தபோதிலும் செவிலியர்களுக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி தப்லீக் செய்து வந்தார்கள். மக்களுக்கு எந்த உயர் நல்லொழுக்கங்களைக் குறித்து அன்னார் அறிவுரை செய்வார்களோ அதனை வீட்டில் அமல்படுத்திக் காட்டுவார்கள். மகிழ்ச்சியிலும், கஷ்டத்திலும் உண்மை மற்றும் இறையச்சத்துடன் ஒன்றியிருந்தார்கள். அல்லாஹ்வை சந்திப்பதற்கு அன்னாரிடம் அதிக துடிப்பு இருந்தது. இந்த உலகிற்கு எந்த அந்தஸ்தும் இல்லை. இந்த உலகில் மறுமைக்காக செயல்படுவதே உண்மையான இரட்சிப்பாகும் என்று பெரும்பாலும் கூறி வருவார்கள். பெரும்பாலும் அல்லாஹ்வை சந்திப்பதற்கான ஆர்வத்தைக் குறித்தும் பேசி வந்தார்கள்.

அன்னாரின் மகன் இவ்வாறு கூறுகின்றார்: இறுதி நாட்களில் நான் கவலையுடன் இருப்பதை அன்னார் கண்டபோது என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: எனக்கு அருகில் அமர்ந்து சூரா ஃபாத்திஹா மற்றும் தரூது ஷரீஃப் மீண்டும் மீண்டும் ஓதுங்கள். ஏனென்றால் நோயிலிருந்து குணம் கிடைப்பதென்பது இறைவனின் கட்டளையினால் நிகழ்கின்றது. மேலும் அவனுக்கே மருந்தைப் பற்றிய அறிவும் உள்ளது. அவனது கட்டளையின்றி மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. எனக்கு உலகை பற்றி எந்த கவலையும் இல்லை. மாறாக, இறைவனை சந்திப்பதற்கு எனக்கு ஆர்வம் உள்ளது.

அதே மகன் எழுதுகின்றார்: எனது தாயார் அன்னாரைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்: எனது கணவர் எப்போதும் ஏனைய அனைத்து பணிகளை விடவும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கே முன்னுரிமை வழங்கி வந்தார். வீட்டை விட்டு வெளியிலேயே பெரும்பாலான நேரத்தை கழித்து வந்தார். அந்த அருளின் காரணமாகவே அல்லாஹ்வும் எமது பிள்ளைகளை அசாதாரண முறையில் பாதுகாத்து வருகின்றான்.

டாக்டர் ஹாத்திம் ஹல்மி அஷ்–ஷாஃபி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எங்களது சகோதரரும், ஆசிரியருமான மதிப்பிற்குரிய ஃபத்ஹி அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ் குறிப்பிடுகின்ற மக்களை சார்ந்தவராகவே இருந்தார்கள். அவர்களைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: நம்பிக்கையாளர்களில் சிலர் எப்படிப்பட்ட மக்கள் என்றால் அவர்கள் இறைவனிடம் செய்த உடன்படிக்கையை முழுமை செய்கின்றார்கள். பைஅத்திலிருந்து மரணம் வரை உள்ள காலகட்டத்தில் நான் அன்னாரை ஒரு விநோதமான மனிதராக பார்க்கின்றேன். அன்னாருக்கு இறைவன் மற்றும் அவனது பண்புகள் மற்றும் ஏகத்துவத்தின் அன்பின் மீது ஒரு போதை இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் திருக்குர்ஆனின் அன்பராக இருந்தார்கள். சூரா ஃபாத்திஹாவின் மீதான அன்பில் தன்னை மாய்த்துக் கொண்டிருந்தார்கள். தனது விலைமதிப்புமிக்க தர்ஸுகளில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரைகளில் விண்ணில் சிறகடிப்பதுபோன்று தென்பட்டு வந்தார்கள்.

உர்தனிலிருந்து ஹஸீன் அல்மிஸ்ரி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் காதியான் மீது ஃபத்ஹி சாஹிப் அன்பு கொண்டிருந்தார்கள். கிலாஃபத்தின் மீது அன்னாருக்கு உறுதியான ஈமான் இருந்தது. நிறைய ஞானம் பெற்ற நபராக இருந்தார்கள்.

பின்னர் தனது ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்: 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற காதியான் ஜல்ஸாவில் இருவரும் ஒன்றாக கலந்து கொண்டோம். காதியான் சென்றடைந்தபோது நான் ஸிராயே வஸீமில் தங்க வைக்கப்பட்டேன். ஃபத்ஹி சாஹிப் அவர்கள் அங்கு என்னுடன் மிக அன்புடன் சந்தித்தார்கள். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இரவில் என்னுடன் பராஹீனே அஹ்மதிய்யாவின் விஷயங்களை பேசத் துவங்கி வந்தார்கள். அன்னாருக்கு காதியான் மீது அன்பு இருந்தது. இது நமது அன்பிற்குரிய ஊராகும் என்று காதியானைக் குறித்து கூறி வந்தார்கள். நாங்கள் இருவரும் இணைந்து காதியானிலுள்ள புனித ஸ்தலங்களை பார்த்தோம் என்றும் அன்னார் கூறுகின்றார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஃபத்ஹி சாஹிப் அவர்களுக்கு ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் அதன் வரலாற்றின் விளக்கமான அறிவும் இருந்தது. அன்னார் எந்த நாளில் காதியானிலிருந்து புறப்பட இருந்தார்களோ அன்று நாங்கள் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு பைத்துத் திக்ர் மற்றும் பைத்துல் துஆவில் சென்றோம். அங்கு அன்னாருடைய கடுமையான உருக்கம் மற்றும் மன்றாடுதலைப் பார்த்து என்னால் என்னை கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கிருந்து புறப்பட்டு வெளியில் வந்தபோது நாங்கள் பெஹஷ்த்தி மக்பரா சாலைக்கு அருகில் வந்தோம். அப்போது மிகவும் பதற்றத்துடன் இங்கும் அங்கும் பார்க்கத் தொடங்கினார்கள். பின்னர் சிறிது நேரத்திற்குப் பிறகு நான் விசாரித்தபோது அழுது கொண்டே இருந்தார்கள். பின்னர் நிலத்தில் சஜ்தாவில் விழுந்து விட்டார்கள். பின்னர் எழுந்தார்கள்.

வானத்தை நோக்கி கையை உயர்த்தி நடுநடுங்கிய குரலுடன், இறைவா! உனது அன்பருக்கு அருகில் வசிப்பது எனக்கு எவ்வளவு விருப்பத்திற்குரியதாகும் என்பதை நீ அறிவாய். இறைவா! நான் இன்றைய இரவை இங்கேயே கழிக்க விரும்புகின்றேன் என்பதையும் நீ அறிவாய். ஆனால் சிறிது நேரம் கழித்து இங்கிருந்து புறப்படும் நேரம் வந்து விடும். (ஏனென்றால் அந்த சம்பவம் நடைபெற்ற நாளன்று இன்று நீங்கள் புறப்பட வேண்டிய நாளாகும் என்று அன்னாருக்கு தகவல் கொடுக்கப்பட்டிருந்தது). நீ எல்லா விஷயங்கள் மீது ஆற்றல் படைத்தவனாவாய். எல்லா விவகாரமும் உனது கரங்களிலேயே உள்ளது. அனைத்தும் உனது கட்டளையின் மூலமே நிகழ்கின்றன. சட்டங்கள் நிலைபெறுகின்றன. மற்றும் மாறி விடுகின்றன. எனது பயணத்தை நீ தள்ளி வைத்து விட்டால் சில மனி நேரம் எனது கண்களுக்கு குளிர்ச்சி கிடைத்து விடும் என்று அன்னார் துஆ செய்தார்கள்.

எவ்வாறிருப்பினும் பின்னர் இவ்வாறு நிகழ்ந்தது. வாகனம் வந்தது. ஏனென்றால் அன்றைய நாள் (விமானத்தில்) அவர்களின் இருக்கை உள்ளது என்று கூறப்பட்டிருந்தது. எனவே ஃபத்ஹி சாஹிப் அவர்களின் பொருட்கள் அதில் வைக்கப்பட்டன. சிறிது நேரம் கழித்து அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! என்று ஃபத்ஹே சாஹிப் அவர்களின் முழக்கம் ஒலித்தது.

அன்னார் கூறினார்கள்: எனது கருணைமிகு இறைவன் எனது துஆவை ஒப்புக் கொண்டு விட்டான். எனது பயணத்தை தள்ளி வைத்து விட்டான் என்று கூறினார்கள். அன்னார் இறைவனை புகழ்வதிலும், நன்றி கூர்வதிலும் மும்முரமாக இருந்தார்கள். நான் கீழே இறங்கியபோது ஃபத்ஹி சாஹிப் அவர்கள் மிகவும் அழுத்தத்துடன் என்னை கட்டி அணைத்தார்கள். மேலும் நீங்கள் பார்த்தீர்களா? நமது அன்பிற்குரிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

பரக்கத்தின் மூலமாக அல்லாஹ் நமது துஆக்களை எவ்வாறு ஒப்புக் கொண்டுள்ளான்? மேலும் எவ்வாறு ஒப்புக் கொள்கின்றான் என்பதைப் பார்த்தீர்களா? என்று கூறினார்கள். பின்னர் அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது. அன்னாரைக் கண்டு நானும் கண் கலங்கினேன்.

அன்னார் கூறினார்கள்: இன்று எனது Flight என்று நிர்வாகிகளுக்கு தவறான புரிதல் ஏற்பட்டிருந்தது. இன்றல்ல மாறாக அடுத்த நாள் அல்லது வேறொரு நாளில் எனது Flight இருந்தது என்று கூறினார்கள்.

அன்னாருக்கு தனது மரணத்தைக் குறித்தும் தெரிந்திருந்தது. அதைக் குறித்து அன்னார் ஹுஸைன் சாஹிப் அவர்களிடம் வெளிப்படுத்தி இருந்தார்கள். MTA விற்காக அன்னார் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்தார்கள். இனி அதனை எப்படி செய்ய வேண்டும் என்பது குறித்தும் வழிகாட்டி இருந்தார்கள்.

يَدْعُوْنَ لَكَ اَبْدَالُ الشَّامِ وَعِبَادُ اللهِ مِنَ الْعَرَبِ

என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஓர் இல்ஹாம் வந்தது.

உமக்காக சிரிவாயின் நல்லடியார்கள் துஆ செய்கின்றனர். மேலும் இறையடியார்கள் அரபு நாட்டில் துஆ செய்கின்றார்கள் என்பது அதன் பொருளாகும். இது என்ன விவகாரம் என்பதையும் எப்போது எப்படி நிகழும் என்பதையும் இறைவனே அறிவான். وَاللّٰهُ اَعْلَمُ بِالصَّوَابِ என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(தத்கிரா, நான்காம் பதிப்பு பக்கம் 100)

ஆனால் எவ்வாறிருப்பினும் நாம் பார்த்துள்ளோம். அல்லாஹ்வின் அருளால் எங்கெல்லாம் அரபு நாடுகளில் ஜமாஅத்துகள் உருவாகி வருகின்றனவோ அங்கும் நான் தற்போது வழங்கிய ஃபத்ஹி சாஹிப் அவர்களின் உதாரணங்களைப் போன்று இந்த விஷயம் நமக்கு முன்னால் வந்த வண்ணம் உள்ளன. அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தரூது ஓதக்கூடிய மற்றும் அன்பு மற்றும் நேசத்தை வெளிப்படுத்தக்கூடிய மக்களை அரபுகளிலிருந்து நல்லடியார்களை இறைவன் எவ்வாறு உருவாக்கி வருகின்றான் என்பதை நாம் பார்த்து வருகின்றோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும், அன்னாரின் புத்தகங்கள் மற்றும் கவிதைகள் மீதும் ஃபத்ஹி சாஹிப் அவர்களின் நேசம் எடுத்துரைக்க முடியாததாகும் என்பதற்கு சாட்சியம் வழங்கியவாறு காத்திம் சாஹிப் அவர்களும் இவ்வாறு எழுதுகின்றார்கள்: கிலாஃபத்தின் மீதும் மர்ஹூம் அவர்களின் அன்பும், கட்டுப்படுதலும், மரியாதையும் அன்னாரின் ஒவ்வொரு சொல் மற்றும் செயலிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அது அனைவருக்கும் தென்பட்டது. கிலாஃபத் என்பது இறைவனின் மகத்துவமிக்க அருட்கொடையாகும் என்பதில் அன்னார் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அது கிடைத்ததற்காக இறைவனை புகழ்ந்து கொண்டும், அவனுக்கு நன்றி கூறிக்கொண்டும் இருந்தார்கள். அன்னார் அந்த அல்லாஹ்வின் கயிற்றை மிகுந்த உறுதியுடன் பிடித்திருந்தார்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் தன்னை அர்ப்பணித்திருந்தார்கள். இதனை நானும் கண்டுள்ளேன்.

இதுபோன்ற அன்பும் நேசமும் நேரில் சந்தித்தபோது அன்னாரின் கண்களிலிருந்தும் ஒவ்வொரு அசைவிலிருந்தும் தென்பட்டு வந்தது. அது அசாதாரண தரத்தைக் கொண்டிருந்தது. அத்துடன் மரியாதையும், கண்ணியமும் அளவற்றதாக இருந்தது. ஏராளமான அறிவார்ந்த கட்டுரைகளை எடுத்துக் கொண்டு வருவார்கள். அன்னாருடைய ஒரு கூற்று அல்லது ஆதாரம் எனக்கு புரியவில்லை என்றாலோ அல்லது அதனை நான் ரத்து செய்திருந்தாலோ அல்லது மேலும் ஆராய்ச்சி செய்யும்படி கூறினாலோ முழுமையான திறந்த மனதுடன் அதை ஏற்றுக் கொள்வார்கள். அன்னார் கிலாஃபத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவராகவும், வலிமையான உதவியாளராகவும் இருந்தார்கள்.

உஸாமா அப்துல் அஸீம் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஃபத்ஹி அப்துஸ் ஸலாம் சாஹிப் மாபெரும் அறிஞராக இருந்தார்கள். வயதிலும் மிகவும் மூத்தவராக இருந்தபோதிலும் மிகவும் பணிவான மனிதராக இருந்தார்கள். எங்களில் மிக சிறியவர்களிடமும் கூட மிகவும் மரியாதையாக நடந்து வந்தார்கள். அவரின் ஆலோசனையையும் ஒப்புக் கொண்டு வந்தார்கள். மிகவும் பரந்துபட்ட தைரியத்திற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். ஒருவேளை யாரிடமாவது ஏதாவது வரம்பு மீறுதல் ஏற்பட்டு விட்டால் அனைவருக்கு முன்பாகவும் மிகவும் பணிவுடன் அவரிடம் வருத்தம் தெரிவிப்பார்கள். மேலும் அவரது தலையில் முத்தமிடுவார்கள்.

மர்ஹூம் அவர்களுக்கு இஸ்லாத்தின் மீது அதிகமான அன்பு இருந்தது. மேலும் அஹ்மதி இளைஞர்களை ஜமாஅத்தின் எப்படிப்பட்ட தொண்டர்களாகவும், வீரர்களாகவும் அன்னார் ஆக்க விரும்பினார்கள் என்றால் அவர்களிடம் அறிவும், ஆன்மீகமும் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். நீண்ட இரவு வரை அறிவுரை செய்து வந்தார்கள். ஜமாஅத்தின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். மிகவும் மென்மையான மனிதராக அன்னார் இருந்தார்கள். ஒருவர் அன்னாரிடம் பிடிவாதமாக பேசினாலும் கூட அவரிடமும் கடும் சொற்களில் பதில் கொடுக்க மாட்டார்கள்.

எனது கவனத்திலும் இது உள்ளது. சில மக்கள் அன்னாருக்கு கடும் துன்பத்தை கொடுத்தார்கள். அன்னாரிடம் கடுமையாக நடந்து கொண்டனர். ஆனால் தற்செயலாக ஏதாவதொரு காரணத்தால் ஃபத்ஹி சாஹிப் அவர்களின் வாயிலிருந்து ஏதாவது கடும் சொல் வெளியேறி விட்டாலும் கூட பின்னர் அன்னார் மன்னிப்பும் கேட்பார்கள். சில முறை நான் இன்ன நபருடன் இவ்வாறு பேசியுள்ளேன். அவரிடம் மன்னிப்பும் கோரியுள்ளேன் என்று எனக்கும் கடிதம் எழுதி விடுவார்கள். இதுபோன்ற தைரியம் மிகக் குறைவான மக்களிடமே இருக்கும்.

தமீம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் பெரும்பாலும் இவ்வாறு கூறி வந்தார்கள். இஸ்லாத்தில் கிலாஃபத் இல்லாமல் எந்தவொரு பணியும் சரியாக நடைபெற முடியாது. பல்வேறு சிந்தனைகளின் பக்கம் ஈர்க்கக்கூடிய விஷயத்திற்கு நமக்கு அவசியம் இல்லை. மாறாக கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு கட்டுகின்ற கிலாஃபத்தின் அவசியமே நமக்கு உள்ளது. இறைவனின் வழிகாட்டுதலின் விளைவாக அவர் (கலீஃபா) நம்மை வழி நடத்துகின்றார்.

மர்ஹூம் எப்போதும் காலத்தின் கலீஃபா ஒப்புக் கொள்ளாத எல்லா விஷயங்களையும் விட்டு விடுவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஹுஸூர் அவர்களை அன்னார் எப்போது சந்தித்து வந்தாலும் ஒரு வினோதமான மகிழ்ச்சியில் தழைத்திருப்பதுபோன்று தென்பட்டு வந்தார். மேலும் மிகவும் உள் அன்புடனும், நேசத்துடனும் சந்திப்பில் நடைபெற்ற விஷயங்களை குறிப்பிட்டு வந்தார்.

பாலஸ்தீனத்திலிருந்து சமாஹ் சாஹிபா என்ற பெண்மணி கூறுகின்றார்: நான் ஒரு கனவில் கண்டேன். ஒரு வானவர் சபையில் அமர்ந்திருந்த அஹ்மதிகளை சூழ்ந்து கொண்டார். ஃபத்ஹி சாஹிப் அவர்கள் வந்தவுடன் வானவர் ஃபத்ஹி சாஹிபிடம் இவ்வாறு கூறினார்: நீங்கள் இந்த பூந்தோட்டத்தின் மிகவும் அழகான பூ ஆவீர்கள். எனவே ஃபத்ஹி சாஹிப் அவர்கள் எவ்வளவு தூய மனிதராக இருக்கின்றார்கள் என்று நான் எனது சகோதரியிடம் கனவில் கூறினேன்.

அரபி டெஸ்கைச் சேர்ந்த தாஹிர் நதீம் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னாரிடத்தில் ஒரு பெரும் சிறப்பு இருந்தது. அது என்னவென்றால், ஒரு பெரும் அறிஞராக இருந்தபோதும் அந்த நபர் பணிவின் வடிவமாக இருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களுடன் அன்னாருக்கு எல்லையற்ற அன்பும், நேசமும் இருந்தது. பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை அன்னார் எண்ணற்ற முறை படித்துள்ளார்கள். மேலும் அதிலிருந்து புதிய புதிய பொருள்களை எடுத்து முன் வைத்து வந்தார்கள். அது குறித்து அன்னார் பல்வேறு நிகழ்ச்சிகளையும் ஒளிப்பதிவு செய்ய வைத்துள்ளார்கள். ஜலஸாவிலும் அன்னார் ஒளியமானவராக இருந்தார்கள். நாம் அனைவரும் அறிவோம். மிகவும் அழுத்தமான குரலாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

இருந்தது. இறுதி நாள் அன்று மிக உணர்வுப்பூர்வமாக முழக்கமிட்டு வந்தார்கள். அன்னாரின் முழக்கங்களில் ஓர் உத்வேகம் இருந்தது. அன்னாரின் உள்ளத்திலிருந்து குரல் வெடிப்பது போன்று இருந்தது.

அல்லாஹ் அன்னாரது பிள்ளைகளுக்கும் அன்னாரின் அடிச்சுவட்டில் நடப்பதற்கு நற்பேறு வழங்குவானாக. பிள்ளைகளுக்காக அன்னார் செய்த துஆக்களையும் அல்லாஹ் ஒப்புக் கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளையும் அல்லாஹ் உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய தாஹிரா சுல்தான் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களில் மாரடைப்பின் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் லஜ்னா பாகிஸ்தான் அமைப்பில் பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்துள்ளது. குறிப்பாக கித்மத்தே கல்க் துறையில் அன்னாருக்கு அதிகமாக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது.

அன்னாரின் கணவர் டாக்டர் சுல்தான் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஜமாஅத் மற்றும் கிலாஃபத்திற்கு நன்றியுணர்வுமிக்க பெண்மணியாக இருந்தார்கள். எங்களது வீடு மஸ்ஜிது முபாரக் அருகில் உள்ளது என்ற விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். அன்னாருக்கு திருமணமானபோது அந்த நேரத்தில் அன்னாரின் மாமியார் மரணமடைந்திருந்தார்கள். மேலும் அன்னாரின் மாமனார் மவ்லானா தோஸ்த் முஹம்மது ஷாஹிது சாஹிப் அவர்கள் உயிருடன் இருந்தார்கள். அன்னாருக்கு எப்போதும் மகளைப்போன்று தொண்டாற்றியுள்ளார்கள். அன்னாரின் அனைத்து தேவைகளையும் கருத்தில் கொண்டார்கள்.

அன்னாரிடத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து வரக்கூடிய விருந்தினர்கள் பகலில் எந்த நேரத்திலும் வருகை தருவார்கள். இருந்தபோதிலும் முழுமையான முறையில் அன்னார் விருந்து உபசரிப்பு செய்து வந்தார்கள். ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவரின் மருமகளாக இருப்பதற்குரிய உரிமையை அன்னார் முழுமையாக நிறைவேற்றினார்கள். ஏழைகளை மிகவும் பராமரிக்கக் கூடியவராக இருந்தார்கள். இந்த விஷயத்தில் அன்னாரின் கரம் மிக சுதந்திரமாக செயல்பட்டது. சில முறை அதற்காக கடனாளியாகக் கூட ஆகிவிடுவார்கள். சில நேரங்களில் தமது முழு நகைகளையும் விற்று விடுவார்கள். மேலும் ஏழைகளை எல்லா வகையிலும் கருத்தில் கொள்வார்கள். அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். நகைகளை விற்றும் அன்னார் தனது சில சந்தாக்களை செலுத்தியுள்ளார்கள். சில திட்டங்களுக்காக நகைகளை கொடுத்துள்ளார்கள். தன் புறமிருந்து மட்டுமல்ல. மாறாக, தனது மர்ஹூம் பெற்றோர்கள் சார்பாகவும் கண்டிப்பாக சந்தா கொடுத்து வந்தார்கள். மிகவும் தூய்மையை விரும்பக்கூடியவராக இருந்தார்கள்.

துஆ செய்யக்கூடியவராக இருந்தார்கள். நோன்பு மற்றும் தொழுகைகளை பேணக் கூடியவராக இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்களுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக. இந்தப் பிள்ளைகளுக்கும், டாக்டர் சாஹிப் அவர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய கசூன் அல்முஅஸ்ஸமானி சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் சிரியாவைச் சார்ந்தவர் ஆவார்கள். இன்றைய நாட்களில் துருக்கியில் இருந்தார்கள். 42 வது வயதில் கடந்த நாட்களில் அன்னாரின் மரணமும் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

நீண்ட நாட்களாக நோயுற்றிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். துருக்கி ஜமாஅத்தின் தலைவர் முரப்பி சாதிக் பட் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 2015 ஆம் ஆண்டில் மர்ஹூமா சிரியாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து துருக்கி வந்திருந்தார்கள். 2016 ஆம் ஆண்டில் இஸ்கந்தரூன் ஜமாஅத்தின் சதர் லஜ்னாவாக நியமனம் செய்யப்பட்டார்கள். இறுதி மூச்சு வரை சதர் லஜ்னாவாக தொண்டாற்றி வந்தார்கள். நீண்ட காலமாக நோயுற்றிருந்தார்கள். படுக்கையில் இருந்தார்கள். இருந்தபோதிலும் இந்த நோயின் நிலையிலும் இயன்ற வரை மார்க்கத் தொண்டில் மும்முரமாக இருந்தார்கள். இணையதளம் மூலமாக பல்வேறு தளங்களில் தப்லீக் செய்து வந்தார்கள். மேலும் சிரியா நாட்டின் அஹ்மதி பெண்களின் கல்வி மற்றும் தர்பிய்யத் பணிகளில் முக்கிய பங்கு ஆற்றியுள்ளார்கள். எல்லாராலும் நேசிக்கப்பட்டு வந்தார்கள். உண்மையான அனுதாபம் கொண்டிருந்தார்கள். அனைவரின் நலம் விரும்பியாக இருந்தார்கள்.

இன்னும் சில பெண்மணிகளும் எனக்கு எழுதியுள்ளார்கள். அவர்கள் அன்னாரை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிபுடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவருடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

.....☆.....☆.....☆.....

## நபிமொழி

### தருமம் செய்வதற்கான அறிவுரை மற்றும் அதன் சிறப்புகள்

♦ ஹஸ்ரத் அபூ மஸ்வூத் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் தர்மம் செய்யும்படி எங்களுக்கு கட்டளையிட்டால் எங்களில் ஒருவர் கடை வீதிக்குச் சென்று (கூலி வேலை செய்து) சுமை சுமந்து இரண்டு கையளவு தானியம் சம்பாதித்து (அதைத் தர்மம் செய்து) விடுவார். ஆனால் இன்று நிலை என்னவென்றால், அவர்களில் சிலரிடம் ஒரு இலட்சம் (திர்ஹம் தீனார்) வரை உள்ளன.

(சஹீஹ் புகாரி, ஸகாத்தின் சட்டங்கள், ஹதீஸ் எண் 1416)

♦ அதீ இப்னு ஹாத்திம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பேரீத்தம் பழத்தின் சிறு துண்டையேனும் (தருமம்) செய்து நரகத்திலிருந்து (உங்களைப்) பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்ததை நான் செவிமடுத்துள்ளேன்.

(சஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் 1417)

♦ ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு பெண்மணி தன்னுடைய இரண்டு குழந்தைகளுடன் யாசித்த வண்ணம் வந்தார். என்னிடம் அப்போது ஒரு பேரீத்தம் பழத்தைத் தவிர வேறு எதனையும் அவர் காணவில்லை. எனவே நான் அந்த பேரீத்தம் பழத்தை அவரிடம் கொடுத்து விட்டேன். அவர் அதை இரண்டாகப் பங்கிட்டு தனது இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்து விட்டார். அவர் அதிலிருந்து சாப்பிடவில்லை. பிறகு அவர் எழுந்து வெளியில் சென்று விட்டார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். நான் அவர்களுக்கு இந்த சம்பவத்தை கூறியதும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் இந்த பெண் பிள்ளைகளால் ஏதாவது துன்பத்திற்கு ஆளாகுவாரோ அவருக்கு அந்த பெண் பிள்ளைகள் நரகத்திலிருந்து அவரைக் காக்கும் திரையாக இருப்பார்கள்.

(சஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் 1418)

## கேள்வி – பதில்

**கேள்வி:** ஹுஸூர்! பெருநாள் சந்தர்ப்பத்தில் சிலர் பள்ளிவாசலுக்கு வருகை தந்து பெருநாள் தொழுகைக்கு முன்பு அல்லது பின்னர் நஃபில் தொழுகின்றனர். இது தொடர்பாக வழிகாட்டும்படி ஒரு முரப்பி சாஹிப் வேண்டினார்.

**பதில்:** ஹதீஸ்களிலிருந்து நிரூபணம் ஆகுவதுபோன்று பெருநாள் தொழுகைக்கு முன்பு நஃபில் தொழுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் பெருநாள் தொழுகைக்குப் பின்பு தடுக்கப்பட்ட நேரம் துவங்கவில்லையென்றால், வீட்டிற்கு சென்று நஃபில் தொழுது கொள்ளலாம். தவறில்லை. (அல்ஃபஸ்ல் 18 டிசம்பர் 2020)

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

## தவறான டிவி நிகழ்ச்சிகளை பார்க்காதீர்கள். தவறான நபர்களுடன் நட்பு பாராட்டாதுர்கள். மனிதன் தொழுகையை சரியான முறையில் தொழுது வந்தால் மேலும் இறைவனுக்காக தொழுது வந்தால் பின்னர் ஏராளமான தீமைகள் அகன்று விடுகின்றன. தர்பிய்யத் விவகாரங்களில் ஹுஸூர் (அய்ய) அவர்களின் பொன்னான அறிவுரைகள்

### அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் ஆஸ்திரேலியாவின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மஜ்லிஸ்களின் காயித்மார்களின் (Online) சந்திப்பு

டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி 2020 ஆம் ஆண்டு இரவு 9 மணி அளவில் மஸ்ஜிது பைத்துல் ஹுதா சிட்னியில் கிலாஃபத் ஹாலில் அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் எங்களுடைய சந்திப்பு நிகழ்ந்தது.

9 மணி ஆனவுடன் அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களின் சிரித்த ஒளிமயமான முகம் திரையில் தோன்றியது. அப்போது அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று ஹுஸூர் (அய்ய) அவர்களை வரவேற்றோம். ஹுஸூர் அக்தஸ் அவர்கள் அப்போது அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் அனைவரையும் அமரும்படி கட்டளையிட்டார்கள். ஹுஸூர் அவர்கள் வந்தவுடன் அனைத்து கவலைகளும் பதற்றத்தின் தன்மைகளும் அகன்று விட்டன.

கொரோனா வைரஸ் உலகில் எங்கு மக்களை தத்தமது இடத்தில் பூட்டி வைத்துள்ளதோ அங்கு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திற்காக ஏற்கனவே இதுபோன்ற வழிமுறைகளை உருவாக்கி விட்டான். அதாவது இன்று நாங்கள் எங்களது நாட்டிலிருந்து 10000 மைல் தொலைவில் அமர்ந்து கொண்டு கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை அவர்களுடைய அலுவலகத்தில் சந்திக்கும் நற்பேறை பெற்று வருகின்றோம்.

இந்த வருடம் ஹுஸூர் அவர்கள் ஆஸ்திரேலியாவிற்கு வருகை தருவார்கள் என்றும் நாம் நேரடியாக ஹுஸூர் அவர்களை சந்திப்போம் என்றும் நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் இறைவனின் அருளாலும், கருணையாளும் ஆன்லைன் சந்திப்பின் மூலமாக ஹுஸூர் அவர்கள் எங்களுக்கு மத்தியிலேயே இருப்பதைப் போன்ற உணர்வு அனைத்து காதிம்கள் மற்றும் திஃபில்களுக்கு ஏற்பட்டது.

மஜ்லிஸ் ஆமிலாவின் 30 உறுப்பினர்களும், 12 மஜ்லிஸ்களின் காயித்மார்களும் இந்த சந்திப்பில் பங்குபெறும் நற்பேறு பெற்றார்கள். 1:20 மணி வரை இந்த சந்திப்பு தொடர்ந்தது. அதில் தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கும், மஜ்லிஸ்களின் காயித்களுக்கும் அன்பிற்குரிய எஜமானருக்கு முன்னிலையில் தமது அறிமுகத்தை எடுத்துரைக்க நற்பேறு கிடைத்தது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் தேசிய ஆமிலாவின் உறுப்பினர்களிடம் தனித்தனியாக அவர்களின் பணிகளை குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும் மிகவும் விலைமதிக்கத்தக்க அறிவுரைகளையும் வழங்கினார்கள். மேலும் தர்பிய்யத் விவகாரங்களின் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

காதிம்களின் தர்பிய்யத்துடன் தொடர்புடைய ஏனைய விவகாரங்களின் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருந்தார்கள். அதாவது தவறான டிவி நிகழ்ச்சிகளை பார்க்காதீர்கள். தவறான நண்பர்களுடன் நட்பு பாராட்டாதீர்கள். திருமணமானவர்கள் தமது மனைவி மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். தலாக் மிக மிக குறைவாகவே நடக்க வேண்டும். குடும்ப சண்டைகள் மிக மிக குறைவாகவே இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளுமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

மேலும் இது தொடர்பாக செயற்குழு உறுப்பினர்கள் தமது சிறப்பான முன்னுதாரணத்தை காட்ட வேண்டும். மேலும் அங்கே இங்கே திருமணம் செய்து கொள்வதற்கு பகரமாக அஹ்மதிகளுக்கு மத்தியிலேயே திருமணம் செய்ய காதிம்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மேலும் சமூகத்தில் பரவியுள்ள பலதரப்பட்ட தீமைகளிலிருந்து எவ்வாறு தப்பிப்பது? என்பது பற்றியும் உங்களது தர்பிய்யத் நிகழ்ச்சிகளில் பங்கு இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

மனிதன் தொழுகைகளை சரியாக தொழுதால் மேலும் அல்லாஹ்விற்காக தொழுதால் பின்னர் அனைத்து தீமைகளும் அகன்று விடுகின்றன. தொழுகைகளின் பக்கம் கவனமூட்டுவதுடன் தர்பிய்யத்தினுடைய ஏனைய நிகழ்ச்சிகளையும் வடிவமைக்க வேண்டும். அதில் அல்லாஹ் நம்மிடம் என்ன விரும்புகின்றான் என்பதைப் பற்றி காதிம்களை அறியச் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

பிள்ளைகளின் தர்பிய்யத் பற்றிய கேள்விக்கு பதிலாக ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

அன்னாரின் மகன் தங்களுக்கு என் மீது அன்பு உள்ளதா? என்று கேட்டார். அதற்கு ஆம்! என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு தங்களுக்கு அல்லாஹ்வின் மீது அன்பு உள்ளதா? என்று அன்னாரின் மகன் கேட்டார். ஆம்! என்று அன்னார் பதிலளித்தார்கள். அப்போது ஓர் உள்ளத்தில் இரண்டு அன்புகள் ஒன்றுகூடுவது எவ்வாறு சாத்தியம்? என்று மகன் கேட்டார்.

அதற்கு அன்னார் (ரலி) அவர்கள், அன்பிற்கென்று தனித்தரம் உள்ளது. அல்லாஹ்வின் அன்பிற்குரிய கேள்வி வரும்போது அவனது நேசமானது ஏனைய அனைத்தின் மீது மேலோங்கி விடும். மேலும் உன்மீதான அன்பு இரண்டாம் பட்சமாக இருக்கும் என்று கூறினார்கள்.

பிள்ளைகளின் மீது நிச்சயம் அன்பு இருக்க வேண்டும். ஆனால் அல்லாஹ்வின் கட்டளையின்படி நடக்க வேண்டும். பிள்ளைகள் தவறான பணி செய்கின்றார்கள் என்றால் அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராக நடக்கின்றார்கள் என்றால் பிள்ளைகளின் மீதான அன்பின் காரணமாக அவர்களை எதுவும் கூறாதீர்கள் என்று நாம் கூறினால் அது தவறாகும். குழந்தைப் பருவம் முதலே பிள்ளைகளின் உள்ளத்தில் இந்த எண்ணத்தை ஏற்படுத்துங்கள். அதாவது உங்களிடம் எனக்கு அன்பும் தொடர்பும் உள்ளது. ஆனால் நான் உங்களை விட அல்லாஹ்வையே அதிகம் நேசிக்கின்றேன். எனவே என்னிடமிருந்து நீங்கள் அன்பைப் பெற வேண்டுமென்றால், நீங்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி நடக்க வேண்டும். மேலும் அவன் மீது அன்பு கொள்ள வேண்டும்.

இந்த சந்திப்பிற்குப் பிறகு கலந்து கொண்ட அனைவரிடமும் ஒரு தனித்தன்மை வாய்ந்த உணர்வு ஏற்பட்டது. ஒவ்வொருவரும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவாறு ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்களை கூறிக் கொண்டனர். அத்துடன் ஹுஸூர் அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின் ஒளியில் தனது நஃப்ஸையும், தொண்டுகளையும் மேம்படுத்துவதின் பக்கம் கவனம் செலுத்தினர்.

இதுபோன்ற அருளுக்குரிய சந்திப்புகள் மீண்டும் மீண்டும் நடைபெற வேண்டும் என்ற ஒரே விஷயம் தான் அனைவரின் உதடுகளிலும் இருந்தது. ஏனென்றால் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் அமர்ந்த ஒவ்வொரு தருணமும் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கும், மன தைரியத்திற்கும் காரணமாக அமைந்தது.

அல்லாஹ் நமது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களுக்கு நல்ல உடல்நலத்துடன் கூடிய நீண்ட ஆயுளை வழங்குவானாக. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் நிழலின் கீழ் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு உலகளாவிய முன்னேற்றங்களை வழங்குவானாக.

(வகாஸ் அஹ்மது, சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா – ஆஸ்திரேலியா)

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, செப்டம்பர் 18, 2020)

......☆......☆......☆......


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 19 Aug 2021 Issue No. 33

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நிராகரிப்பாளர்களுக்கும் இதே நிலையே இருந்திருக்கும்.

என்னைப் பொருத்தவரை இதைத் தவிர்த்து இந்த வசனத்திற்கு வேறொரு பொருளும் உள்ளது. விரிவுரையாளர்கள் பொதுவாக வெளிப்படையான மொழி வளம், இலக்கியம் மற்றும் அற்புதங்களைப் பற்றியே விவாதிக்கின்றனர். திருக்குர்ஆனின் போதனைகளின் சிறப்புகளைப் பற்றி மிகக் குறைவாகவே விவாதிக்கின்றனர். என்னைப் பொருத்தவரை திருக்குர்ஆன் வந்ததற்கு மாபெரும் காரணம் என்னவென்றால், அது திருக்குர்ஆனுடைய முழுமையான மற்றும் உளம் கவரும் போதனையாகும். அது குறித்தே تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ (இவை முழுமையானதும், மிக நுட்பமான ஞானத்தைக் கொண்டதுமான வேத வசனங்களாகும். (40:1) என்பதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

رُبَمَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا (நிராகரிப்பாளர்கள் தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்கலாமே என்று பல வேளைகளில் விரும்புகின்றனர் (15:4)) என்பதில் இந்த போதனைகளின் சிறப்புகள் பற்றிய ஏக்கமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: இஸ்லாத்தின் போதனைகளின் சிறப்புகளைப் பார்த்து நாமும் முஸ்லிமாகி இருக்க வேண்டுமே என்று நிராகரிப்பாளர் மீண்டும் மீண்டும் கூறுவர். இது எப்போதும் நடந்து வந்துள்ளது. இது நடந்து கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆனில் ஒரு வசனம் உள்ளது. அது எமது வேதத்தில் இறங்கி இருந்தால் அந்த நாளை நாங்கள் பெருநாளாக கொண்டாடி இருப்போம் என்று ஒரு யூதர் கூறினார். . ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அது எந்த வசனம்? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ (இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன் (5:4) என்று பதிலளித்தார். அதற்கு அந்த நாள் எங்களுக்கு இரண்டு பெருநாளுக்குரிய நாளாக இருந்தது என்று அன்னார் கூறினார்கள். அதாவது ஜுமுஆ நாளன்றும், அரஃபா நாளன்றும் இந்த வசனம் இறங்கி இருந்தது.

அதேபோன்று மற்றொரு யூதர் ஒருவர் இவ்வாறு கூறினார்: உங்களது ஷரீஅத்தில் ஒரு விஷயத்தைப் பார்த்து ஆச்சரியம் ஏற்படுகின்றது. அதாவது ஷரீஅத் ஒளி பாய்ச்சாத மனித வாழ்க்கையின் எந்தவொரு பகுதியும் இல்லை என்று கூறினார். இந்த ஆசைகளே ஆயிரக்கணக்கான உள்ளங்களில் உருவாகி இருக்கும். ஆனால் ஒரிருவரின் வாயிலிருந்தே அவை வெளிப்பட்டுள்ளது.

திருக்குர்ஆனும் இவ்வாறு கூறியுள்ளது: يَوَدُّ (அவர்களின் உள்ளம் விரும்புகினற்து) يَقُوْلُ என்று கூறவில்லை. (அதாவது அவர்களின் வாயும் வெளிப்படுத்துகின்றது). இக்காலத்திலும் தலாக் விவகாரம், மது விவகாரம், சொத்து விவகாரம், மேலும் இதுபோன்ற ஏராளமான விவகாரங்கள் உள்ளன. அதில் உலகம் பொறமை கொள்கின்றது.

ஒரு ஐரோப்பியரின் உள்ளத்தில் நம்மிடத்திலும் தலாக் சட்டம் உருவாகி இருக்க வேண்டுமே என்று எண்ணம் கொள்கின்றார். அப்போது வேறொரு சொல்லில் அவர் நான் முஸ்லிமாகி இருக்க கூடாதா? என்றே அவர் கூறுகின்றார்.

அதேபோன்று ஒரு அமெரிக்கரின் உள்ளத்தில் மது தடை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்போது அவர் ஒரு வகையில் رُبَمَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ كَانُوْا مُسْلِمِيْنَ என்ற வசனத்தை உண்மைப்படுத்துகின்றார்.

தற்போது சிறிது காலமே கழிந்துள்ளது. இந்திய பாராளுமன்றத்தின் ஒரு இந்து உறுப்பினர் குழந்தை திருமணம் தொடர்பாக ஒரு சட்ட மசோதாவை முன் வைத்தார்.

அவர் தனது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்: நான் மிகவும் ஏக்கத்துடன் இதனை பார்க்கின்றேன். இஸ்லாம் எவ்வாறு திருமண சட்டத்தை உருவாக்கி முஸ்லிம் சமுதாயத்தை பாதுகாத்துள்ளதோ அதுபோன்ற எந்த சட்டமும் நம்மிடம் இல்லை என்று அவர் கூறினார்.

வசனத்திலும் رُبَمَا என்ற சொல் வைக்கப்பட்டுள்ளது. அது பல முறை என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அதாவது அந்த மக்களுக்கு கூட்டாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான எண்ணம் தோன்றாது. மாறாக, தனித்தனி விவகாரங்களில் அவர்களின் உள்ளங்களில் இந்த விவகாரம் நம்மிடத்தில் இருந்திருக்க வேண்டுமே என்று ஆசை உருவாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 5 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(மல்ஃபூஸாத்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெறாத நபரிடமும், இறைஞானம் மற்றும் அகப்பார்வையின் வழிகள் திறந்து கொடுக்கப்படாத நபரிடமும், ஆலிம் என்று அழைக்கப்பட்டு அறிவின் சிறப்புகள் மற்றும் பண்புகளிலிருந்து முற்றிலும் செவிடராக இருப்பவரிடமும் உண்மையான ஞானத்தால் கிடைக்கின்ற ஒளியும், வெளிச்சமும் அவர்களிடத்தில் காணப்படுவதில்லை. மாறாக, அதுபோன்ற மக்கள் முற்றிலும் நஷ்டத்திலும், பாதிப்பிலும் இருக்கின்றனர். இவர்கள் தமது மறுமையை புகையாலும் இருளாலும் நிரப்பிக் கொள்கின்றனர். அவர்களைக் குறித்தே அல்லாஹ் مَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى (17:73) என்று கூறுகின்றான்.

எவர் இவ்வுலகில் பார்வையற்றவராக இருப்பாரோ அவர் மறுமையிலும் பார்வையற்றவராக எழுப்பப்படுவார். எவருக்கு இங்கு அறிவும், அகப்பார்வையும், இறைஞானமும் வழங்கப்படவில்லையோ அவருக்கு அங்கு (மறுமையில்) என்ன அறிவு கிடைக்கும். அல்லாஹ்வை பார்க்கக்கூடிய கண்களை இவ்வுலகிலிருந்தே எடுத்துச் செல்ல வேண்டியதிருந்தது. எவர் இவ்வுலகில் அந்தக் கண்ணை பெற்றுக் கொள்வதில்லையோ அவர் அல்லாஹ்வை பார்ப்பார் என்று அவர் மீது எதிர்பார்ப்பு வைக்கக்கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 317 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் பெல்ஜியம் செயற்குழு உறுப்பினர்களின் (ஆன்லைன்) சந்திப்பு – ஹுஸூர் (அய்ய) அவர்களின் வழிகாட்டல்**

செயற்குழு உறுப்பினர்கள் தமது துறையில் செயற்களத்தில் தம்மைதாமே முன்னுதாரணமாக முன் நிறுத்த வேண்டும். அதனால் ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தாக்கம் பெறுகின்றார். உள்ளூர் ஜமாஅத் தலைவர்கள் தத்தமது பகுதியின் உள்ளூர் (அரசாங்க) நிர்வாகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை 18 டிசம்பர் 2020)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad